VISIT…

இப்போது மனுபரதனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டால், அவளை யாரும் கட்டாயப் படுத்தமுடியாது. நாணலாய் வளைந்து கொடுத்துக் காப்பாற்ற அவளுக்கு எந்த உறவும் இல்லை. கட்டளையிட்டு அவளைப் பணிய வைக்கக் கூட அவளுக்கு யாரும் இல்லாத நிலை.

புண்ணியம் கட்டிக் கொண்ட மாமனிதன். மனுபரதனேதான்.

இப்போது அவனுக்குத் தேவை பிள்ளை மட்டும் தான். மற்றபடி பணத்தை வீசினால் பெண்களுக்கா பஞ்சம்? அதுவும் அவனைப் போல விதம் விதமாக வீசத் தெரிந்தவனுக்கு.

அவனே சொன்னானே இரண்டு நாள் சுகத்துக்காக வாழ்நாள் முழுவதும் வட்டி செலுத்தமுடியுமா என்று. இரண்டே நாளில் ஒருத்தி அலுத்துப் போய் விடும் போல. அடுத்தவளைத் தேடி...

யோசிக்கத் தெரியவில்லை என்று அவன் சொன்னதை மெய்ப்படுத்துவது போல என்ன பயனற்ற யோசனை இது என்று தன்னைத் தானே கண்டித்துக் கொண்டு மயூரி அன்றையப் பிரச்சினைக்கு வந்தாள்.

இப்போது மனுபரதன், பிள்ளைக்காக மட்டும் தான், அவளை மணக்கக் கேட்கிறான்.

தெளிவாகிவிட்ட ஒரு விஷயம் இது.

அடுத்தது மயூரியின் விஷயம்.

வயிற்றுக்குள் 'களுக் முளுக்' என்ற உருண்டு புரண்டு கொண்டிருக்கும் குழந்தைக்காகத் தாயாக ஒரு நாளுமே

அவள் தன்னை எண்ணிக் கொண்டது கிடையாது. இப்படி ஒன்று வந்துவிட்டதே என்ற கலக்கம்தான். சிசுக் கொலை செய்ய மனம் துணியாத ஒரே காரணத்தால் தான் குழந்தையைப் பெற்றுக் கொள்ள அவள் முடிவு செய்ததே. பெற்று தில்லை நாயகத்தின் இவ்லத்திலேயே விட்டுவிடுவது என்று கூடத் தீர்மானித்தாள்.

இன்று வரை அதே எண்ணத்தில் தான் இருந்தாள்.

ஆனால், அவள் திட்டமிட்டபடி குழந்தையை இல்லத்தில் விட்டுவிட்டல், பிறகு அதனிடம் மயூரிக்கு உரிமை ஏதும் இராது. மனுபரதன் இலகுவாகப் பிள்ளையை எடுத்துச் சென்றுவிடுவான். அப்புறம் அவனை எப்படிப் பழி வாங்குவது? அவள் கையில் ஆயுதமே இராதே?

எட்டாத உயரத்தில் உச்சாணிக் கொம்பில் இருப்பவன். அவனால் ஏற்பட்ட துன்பத்தைக் கொஞ்சமேனும் திருப்பிக் கொடுக்கக் கடவுளாகப் பார்த்துக் கொடுத்த ஒரே வாய்ப்பு இது. இதையும் கை நழுவ விட்டு விடுவது முட்டாள் தனம் இல்லையா?

அவனை மணந்து கொண்டால், பக்கத்திலேயே இருந்து, வார்த்தைகளால் குத்திக் குதறலாம்.

இந்தக் குழந்தை பிறந்து, அதைக் கொடுமைப்படுத்தினால் கூட வலிக்கும் தானே?

மனுபரதனைப் பழி வாங்க வேண்டும் என்றால், மயூரிக்கு அவனை அணுகும், அணுகிப் பேசக் கூடிய உரிமை வேண்டும்.

அந்த உரிமையைப் பெற அவள் அவனை மணந்து கொள்ள வேண்டும்.

அடுத்த விஷயமும், அவள் மனதில் தெளிவாகி விட மயூரி மனுபரதனைக் கூப்பிட்டுப் பேசினாள். யோசிக்கத் தெரியவில்லை என்று அவன் அபிப்ராயம் வழங்கிய பெண் எதுவரை யோசிக்கிறாள் என்று மனுபரதன் அறிய வேண்டாமா?

''முதலில் எனக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிய வேண்டும். உங்கள் பத்து லட்சத்துக்கு அந்த இரண்டு நாட்களுக்கும், வியாபாரக் கணக்கு ஏற்கனவே முடிந்து விட்டது. எந்தப் பாக்கியும் கிடையாது'' என்றுரைத்து அவனை மிடுக்காக நோக்கினாள்.

''தெரியும்.'' என்றான் அவன். ''இந்த மாதிரிச் சமயங்களில் மிருகங்கள் கூட தன் இணையை நெருங்குவதில்லை.''

மிருகமா? நல்ல வார்த்தை எடுத்துக் கொடுத்தாய் என்று எண்ணியவளாய், ''அந்த உதாரணம் எனக்குச் சரிப்படாதே. மிருகங்களுக்கு, அவ்வப்போது 'சீசன்' வருமே. கார்த்திகை மாதத்து நாய் என்று கேள்விப்பட்டது இல்லையா?'' என்று உதாசீனமாகக் கூறியவளுக்கு அவன் முகம் கறுத்தது மிகவும் திருப்தியாக இருந்தது.

ஒரு தரம் கண்மூடித் திறந்தவனின் குரல் சாதாரணமாகவே இருந்தது. ''நீ கவலைப்பட ஒன்றும் இராது. கணவன் மனைவி என்பதால் வீட்டில் ஒரே பகுதியில் இருக்க நேரிடும். ரயில் பயணிகள் போல் நம்மையும் எண்ணிக் கொள். இயன்றவரை உன் தனிமையில் குறுக்கிட மாட்டேன்'' என்று அவன் உறுதி தந்த பிறகே மயூரி அவனை மணக்க சம்மதித்தாள்.

அவளைத்தவிர எல்லாருக்குமே சந்தோஷமே.

சாந்திமதி வாழ்த்தியபோது, ''உங்கள் ஏற்பாடெல்லாம் வீணாகிவிட்டதே மேடம்'' என்று உள்ளூர ஒரு குறுகலுடன் மயூரி வருத்தப்பட்டாள்.

சற்று யோசித்து விட்டு, ''ஓ! தாமரை பற்றிச்சொல்கிறாயா? அதனாலென்னம்மா? தாமரைக்கு வேறு நல்ல இடங்கள் எத்தனையோ கிடைக்கும். ஆனால் உன் குழந்தைக்கு உரிய தந்தை கிடைத்தது, பெரிய விஷயம் அல்லவா? உனக்கு ஒரு கௌரவமான வாழ்க்கை அமைந்ததும், எனக்கு மகிழ்ச்சியே. எனக்கு மட்டும் அல்ல, இந்த வீட்டில் எல்லோருக்குமே. எங்கள் எல்லோருக்குமே உன்னிடம் ஒரு பிரியம் தானே!'' என்றார் மருத்துவர் இதமாக.

அவரது வார்த்தைகள், மயூரியின் அலை பாய்ந்த மனதிற்கு மிகுந்த ஆறுதலை அளித்தன. ஒரு வைர மாலையைக் கொணர்ந்து அணிவித்த மீனாட்சியைக் குறுகுறுப்புடன் மயூரி நோக்கினாள்.

இதை இந்த அம்மா தாமரைக்காகக் கொண்டு வந்திருப்பாள். வசதியுள்ள பெரிய இடத்துப்பொண்ணுக்கு ஏற்றதாகத் தேடிப்பிடித்துத்தேர்வு செய்திருப்பார்கள். இந்தப் பரிசுக்கு ஏற்றதாக பெண் வீட்டிலும் செய்வார்கள் என்று ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். பாவம். இப்போது ஒன்றுமில்லாத ஓர் அனாதைப் பெண் கழுத்தில் அணிவிக்கும்படி ஆயிற்று.

ஆனால் எப்படி ஒத்துக் கொள்ள முடிந்தது? மிகவும் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும்.

தோளுக்கு மிஞ்சினாலே தோழன். இவன் தலைக்கும் மிஞ்சி விட்டவன் ஆயிற்றே. பணிந்து விட்டார் போலும்.

அல்லது, மனுபரதன் சொன்னது போல் மெய்யாகவே கௌரவமாக நடந்து கொள்கிறார்களா?

யோசனையோடு பார்த்த போது மீனாட்சியின் முகத்திலும், ஆராய்சி தான் தெரிந்தது. கொஞ்சம் கவலையும்.

என்ன கவலை?

சொத்துப் போகிறதே என்ற கவலையா? அல்லது இந்தப் பெண் யாருடைய குழந்தையையோ நம் பிள்ளை தலையில் கட்டப் பார்க்கிறாளோ என்ற எண்ணமா?

மனுபரதன், தன்தாயிடம் என்ன சொல்லித் தொலைத் திருக்கக் கூடும்?

எப்படியும் இந்தத் திருமணத்திற்காகத் தான் ஒன்றும் துடித்துக்கொண்டு இருக்கவில்லை என்று தெளிவுபடுத்தி விட வேண்டும் என்று நினைத்து, ''எனக்கு இந்த நகையெல்லாம் வேண்டாம்'' என்று மயூரி மீனாட்சி அம்மாளிடம் மெல்லிய குரலில் கூறினாள். ''நீங்கள் தாமரைக்காக வாங்கியிருப் பீர்கள்'' என்று வேண்டுமென்றே சேர்த்துச் சொன்னாள்.

முகம் தெளிய ''அப்படி அல்ல அம்மா! இது என் மருமகளுக்காக வாங்கியது. அவ்வளவு தான். அது நீ என்பதால்இப்போது இது உனக்குத்தான் உரியது'' என்று பதிலிறுத்தவாறு வைரமாலையின் கொக்கியை நன்றாக அழுத்தி விட்டாள் மீனாட்சி.

அதன்பின், சாந்திமதியிடம் திரும்பி குழந்தை எப்போது பிறக்கும்? அதன் ஆரோக்கியம் எப்படி இருக்கிறது. தடுப்பு ஊசிகள் எப்போது போடுவது என்று விவரம் கேட்டாள்.

மனுபரதன் அவனுடைய தாயின் வாரிசு அல்ல என்று மயூரி எண்ணினாள்.

அவனுடைய தந்தை குருபாதத்திடமும் மகனின் நெஞ்சழுத்தம் காணப்படவில்லை. ஒருவேளை சிறுவயதில் இருந்திருக்குமோ என்னவோ! இப்போது ரொம்பவும் பெருந்தன்மையானவராகத் தோன்றினார்.

என்னவோ அப்பாவுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றானே அப்படிக் கணக்குக் கேட்கிறவராகவே தெரிய வில்லை.

சும்மா அவளிடம் கதைவிட்டிருப்பான் போல.

ஆனால், திருநீரைப் பூசிவிட்டு, ''என்னம்மா அப்பாவும் அம்மாவும் பையனுக்கு நேர் விரோதமாக அமைதியான வர்களாக இருக்கிறார்களே என்று யோசிக்கிறாயா?'' என்று குருபாதம் கேட்டபோது மயூரி திகைத்தாள்.

இந்தப் பெரியவர்கள் அப்படி ஒன்றும் அப்பாவிகள் அல்லவோ? குறைந்த பட்சமாக இந்த மனிதர், இள வயதில் மகனைப் போலவே இருந்திருக்கக் கூடும்.

அவள் முகத்தைப் படித்தவர் போல ''எல்லா ஆட்டங்களும் வயது ஆக ஆக அடங்கிவிடும். ஒரே ஒரு ஸ்ட்ரோக் போதும் நம்மை வெறும் பொம்மை ஆக்கிவிடுவதற்கு. கிடைத்த வாய்ப்பு என்று இந்த டாக்டரம்மா வார்க்கம் 'உப்பு கூடாது. இனிப்புக் கூடாது' என்று நம்மைப் பட்டினி போட்டு விடுகிறார்கள்? எழுந்து நடமாடவே சக்தியற்று போகிறதா? சாதுப்பட்டம், தானாக வந்துசேர்ந்து விடுகிறது'' என்று சோகமாகக் கூறவும் எல்லோரும் நகைத்தனர்.

ம. ''அப்படிப் பட்டினி போட்டதால்தானே ஆரோக்கியமேனும் திரும்பி இருக்கிறது?'' என்றாள் அதிமதி.

உண்மைதான். டாக்டர். இவருக்கு 'ஸ்ட்ரோக்' வந்து கொஞ்ச நாள் என்னமாய் நடுங்கிப் போனோம் தெரியுமா? உணவில், கட்டுப்பாடு முழு ஒய்வு என்று மிகவும் கட்டுப்பாடாக இருந்து தான் தேறினார். மனு முழுதாகத்தொழில் பொறுப்பை ஏற்க நேர்ந்தது. எப்படியோ சமாளித்தான்'' என்று மருத்துவருக்கு ஆதரவாகப் பேசத் தொடங்கி, மகனின் பெருமையில் முடித்தாள் மீனாட்சி.

மயூரியின் மனம் கடுத்தது.

''எப்படியோ' சமாளித்தானா? இரண்டு நாள் உல்லாசத்துக்காக பத்து லட்சம் ரூபாயைத் தூக்கி எறியும் அளவுக்கு மிக நன்றாகவே தானே சமாளித்திருக்கிறான்.

பார்க்கலாம். கத்தி வைக்க எந்தக் கழுத்தும் இல்லாத இப்போது அவன் வாழ்க்கையை எப்படிச் சமாளிக்கிறான் என்று பார்க்கலாம்.

12

திருமணம் மிக எளிமையாக நடந்தது. பெரியவர் தில்லைநாயகம் கூறியதை ஏற்றுப் பதிவுத் திருமணம்செய்தார்கள்.

சுயம்புலிங்கம் தம்பதியர் தங்கள் மகளின் திருமணம் பற்றிக் கண்ட கனவுகள் பற்றி அவருக்கு ஓரளவு தெரியும். திருமணச் சடங்குகளை எளிமையாகவோ, படாடோப மாகவோ எப்படிச் செய்தாலும் மயூரியின் மனம்

வருத்தப் படக்கூடும் என்று எண்ணி அவர் செய்த ஏற்பாடு அது?

ஆனால், வருத்தப்பட்டாக வேண்டும் என்று இருந்தால், எதிலும் வருத்தம் தோன்ற முடியும் என்று பாவம், அவருக்குக் கூடத் தெரியாது போயிற்று.

மகிழ்ச்சியோ, துக்கமோ, எதையும் காட்டாமல், வெறும் பொம்மை போன்று வெற்று முகத்துடன், மயூரி நடமாடியபோதும், உள்ளூர அவளுக்கு மனம் கொதித்துக் கொண்டிருந்தது.

கொதிப்புக்குச் சரியாக வருத்தமும்!

மகளின் திருமணத்தை எப்படியெப்படி நடத்த வேண்டும் என்று பெற்றோர் கனவு கண்டு கொண்டிருந்தார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

அதற்கு நேர் மாறாகத் திருமணம் நடப்பதை எண்ணி ஆத்திரமும், இதைப் பார்க்கக் கூட அந்தப் பெற்றோர் இப்போது இல்லையே என்ற வருத்தமும், அவள் மனதில் அலை மோதிக் கொண்டிருந்தன.

ஆனால் இதை யாரிடம் காட்டுவது?

தாமரையுடைய குடும்பம், ஏதோ உறவினர் வீட்டுத் திருமணம் போல மகிழ்ச்சியோடு வேலைகளில் ஈடுபட்டிருந்தது. விருந்துச் சாப்பாடே அவர்கள் வீட்டில் தான்.

தில்லைநாயகமோ, அவளது மன அமைதிக்காகச் சொன்னவர்.

ருவரும், மனுபரதனைப் பெற்றது
ய்யவில்லை. இவர்களைக் காய

டிய ஒரே மனிதன் செல்ஃபோனைக்
வத்துக் கொண்டு இங்குமங்கும்
டிருந்தான்.

நம்...

சிரித்த முகமாய் எளைய வரும் மற்றவர்களிடம் மயூரிக்குப் பேசவே பிடிக்கவில்லை. சோர்வு என்ற சாக்கில் கண்களை மூடிக் கொண்டு அவள் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

சற்று நேரத்தில், யாரோ தொட்டுப் பார்ப்பதை உணர்ந்து கண்களைத் திறந்து பார்த்தாள்.

மனுபரதன் தான்.

சட்டெனத் தலையைப் பக்கவாட்டில் திருப்பிக் கொண்டு ''என்ன?'' என்று அடிக்குரலில் சீறினாள் மயூரி.

''ஒன்றுமில்லை. கண்மூடி இருந்ததோடு ஒரு மாதிரி சாய்ந்து கிடந்ததால், உடம்பு சரியில்லையோ என்று ஒரு யோசனை. அதனால் தான் தொட்டுப் பார்த்தேன்'' என்று சாதாரணமாகவே பதிலுரைத்தான் மனுபரதன்.

''தொடாதீர்கள்'' என்று பழைய குரலிலேயே கூறினாள் அவள். ''கண்டவர்கள் தொட்டால் எனக்குப் பிடிக்காது''

புருவம் உயர்த்தி சொல்ல வாயெடுத்தவன், அதை நிறுத்தித் தலையசைத்து ''உன் உடல்நிலையால் உனக்கு அதிகக் களைப்பாக இருக்கக் கூடும். உள்ளே போய்ப் படுத்து சற்று ஓய்வு எடுக்கிறாயா?'' என்று கரிசனம் காட்டினான்.

ஆமாம். கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டு காயத்துக்கு மருத்துவம் சொல்கிறானாக்கும்...இவனையெல்லாம்.....

சட்டென நினைவு வர, ''களைப்பாக இல்லை. ஆனால் வருத்தமாக இருக்கிறது'' என்றாள் மயூரி.

அவன் ஏனென்று கேளாத போதும் விடாமல், ''என் திருமணத்தை எப்படியெப்படியோ நடத்த வேண்டும் என்று என் பெற்றோர் கனவு கண்டார்கள்...! ஒவ்வொரு சின்னச்சின்ன நிகழ்ச்சியும் மனதிற்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கக் கூடும். இப்போது ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிட்டீர்களே! களைப்பென்ன களைப்பு? எனக்கு வேதனை தான் மிகுதியாக இருக்கிறது!'' என்று வெறுப்பும் கோபமுமாகக் கூறினாள்.

''இருக்கத்தான் செய்யும்'' என்று ஒத்துக் கொண்டான் மனுபரதன்.

அவனைக் குற்றம் சாட்டினால், மறுக்காமல் ஒத்துக் கொள்கிறானே! நழுவவும் இல்லை.

அவள் திகைப்புடன்நோக்க, அவன் தொடர்ந்து, சொன்னான்.

''பெற்றோருக்கு அப்படிப்பட்ட ஆசைகள் இருப்பது இயல்பு தான். சென்னைக்கு வந்து என் தங்கையின் திருமண சிடியைப் பார்க்கும் போது உனக்கே புரியும். இப்போது சுகியைக் கூட வரவழைக்க முடியாமல் இப்படி அடக்கமாக என் திருமணத்தை நடத்துவது, அவர்களுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். ஆனால் தில்லைநாயகம், சடங்குகளோடு கூடிய கல்யாணம் உன் மனதை வாடவைக்கும். அதனால் இப்படிச் செய்யலாம் என்று எடுத்துச் சொன்னார். அத்தோடு

...தய நிலமையில் அமைதியாக, எளிமையாக ...லது என்று டாக்டரும் சொன்னார்கள். அதனால் த... ...., உனக்குவேறு ஆசை இருக்கும் என்று எண்ணி பாராமல ...ட்டு விட்டோம். சாரி" என்றான் பரிவாக.

அவளது அம்பு உரிய குறியில் படவே இல்லை. அவ்வளவு லட்சணமாக அவள் பேசி விட்டிருக்கிறாள். அவ்வளவு அழகாக அவன் திசை திருப்பியிருக்கிறான். திருமணம் 'தாம்தூம்' என்று நடக்கவில்லையே என்பதா அவள் கவலை?

எரிச்சலுற்று "எனக்கு ஒன்றும் ஆடம்பரத் திருமணத்தில் ஆசையில்லை. அப்பா, அம்மா நினைவு வந்தது. அவர்கள் இருந்து செய்ய நான் கொடுத்து வைக்கவில்லையே என்று நினைத்தேன். வருத்தமாக இருந்தது. அவ்வளவு தான். இப்போது பார்த்தால் உங்கள் பெற்றோரைப் போல் இருந்து, ஆசைகளை அடக்கிக் கஷ்டப்படுவதை விட அவர்கள் போனதே பெரிதென்று எண்ணிக் கொள்ள வேண்டும்போல இருக்கிறதே? சரிசரி. கொஞ்சம் தயவு பண்ணி என்னைத் தனியே விட்டுப் போகிறீர்களா?" என்று வெடுவெடுத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

சில கணம் தயங்கிவிட்டு அங்கிருந்து அகன்றான் அவன்.

திருச்சி இல்லத்திலிருந்து கிளம்பும் போது மயூரிக்கு ஓர் அதிர்ச்சி நேர்ந்தது.

தில்லைநாயகத்திடம் விடைபெறுகையில் அவள் தலையில் கைவைத்து ஆசீர்வதித்து, "நீ பிறந்து வளர்ந்து உன் பெற்றோருக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தாய், மயூரி. ஆனால், நீ வளர வளர, உன்னோடு கூடவே அவர்களுக்கு ஒரு கவலையும் வளர்ந்து கொண்டே தான் இருந்தது" என்றுஅவர்

தொடங்கிய போது மயூரி பெரியதாக எதையும் எதிர்பார்க்க வில்லை.

என்ன நல்ல இடத்தில் திருமணம் நடக்க வேண்டுமே என்று கவலைப்பட்டிருப்பார்கள். அது இப்போது தீர்ந்து விட்டது என்று சொல்லப் போகிறார் என்று தான் அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால் அவர் தெரிவித்தது வேறு விஷயம். "உன் தந்தை, தாய் இருவருக்குமே ஆயுள் கட்டை என்று யாரோ சொன்னார்களாம். அதனால் உன் ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் இங்கு வந்து அவர்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் உன்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வார்கள் செய்கிறேன் என்று வாக்குக் கொடுக்கும் வரை விட மாட்டார்கள். எனக்கு அந்த ஜோசியத்தில் நம்பிக்கை இல்லாத போதும், அவர்கள் திருப்திக்காக ஒத்துக் கொள்வேன். எப்படியும், கடவுள் உன்னைக் காப்பாற்றுவார் என்பேன். இப்போது எனக்கு, அதில் நம்பிக்கை இல்லாத போதும், எப்படியோ அவர்கள் மறைந்து விட்ட போதும், கடவுள் கிருபையால் எப்படியோ உனக்கும் ஒரு நல்லவாழ்வும் அமைந்திருக்கிறது. இது நல்லபடியாக நிலைக்க நம் இறைவன் அருள் பாலிப்பார்" என்று ஆசி கூறினார்.

தில்லைநாயகம் தன் போக்கில் சொன்ன விவரம் தான். ஆனால் மயூரி குழம்பி விட்டாள்.

பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள் என்று தில்லைநாயகம் வந்ததே, பெற்றோர் தற்கொலை தான் செய்தார்கள் என்பதற்கான ஒரு ருசுவாக அவள் எண்ணியது கலைந்து விட்டது.

அப்படியானால் அது எதிர்பாராத விபத்து தானோ? அதற்காக மனுபரதனைக் குற்றம் சாட்டுவது தப்போ என்று அவள் குழம்பும் போதே சுயம்புலிங்கத்தின் எல்ஐசி பாலிசி நினைவு வந்தது.

இல்லை. அது தற்கொலை தான். அதன் காரண கர்த்தாவான மனுபரதன் அதற்காக வருந்தியே தீர வேண்டும்! அவளால் இயன்ற அளவுக்கு அவனை வருத்தியே ஆக வேண்டும்!

குழந்தை பிறந்து விட்டால் அதை நோகடிப்பதன் மூலம், மனுபரதனையும் நன்றாகத் துன்புறுத்த முடியும். அவள் பெரிதாக எதுவும் செய்வதற்கில்லை. ஆனால் கத்தியால் குத்தினால் மட்டும் தான் நோகுமா? குண்டூசியால் குத்தினால், வலிக்கும் தானே?

வள்ளுவர் சொல்படி, 'நாவினால் சுட்ட வடு' தானே ஆறாதது? மனுபரதனும் அவ்வளவாகச் சொல் பொறுக்கிறவன் அல்ல.

தமிழில் இரு நூற்றி நாற்பத்தியேழு எழுத்துக்கள், இவற்றைக் கொண்டு எத்தனையெத்தனை வார்த்தைக் குண்டூசிகளை உருவாக்க முடியும்? பார்த்துக் கொள்ளலாம்.

தனக்குள் செய்திருந்த தீர்மானத்தின் படி கணவனைக் குத்துவதற்குக் கிடைக்கும் எந்த ஒரு சிறு வாய்ப்பையும், மயூரி பயன்படுத்தாமல் விடுவதில்லை.

சாப்பிடும் போது தாயார் பாட்டுப் பாடுவாள். "என் அம்மா எனக்குப் பிடிக்கும் என்று, தன் கையால், ஒரு மொச்சைக் கைமா வைத்துத் தருவார்கள். ரொம்ப ருசியாக இருக்கும். ஊம்

யார் யார் செய்த கொடுமையோ, இப்போது எனக்குச் சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லை!" என்று பெருமூச்சு விடுவாள்.

அந்தக் 'கொடுமை' என்ற சொல் குத்தும். வெளியே அவன் காட்டிக் கொள்ளா விட்டாலும் குத்தி இருக்கும் என்பது அவளது எண்ணம்.

ஆனால் கர்ப்பிணிப் பெண் ஆசைப்படுகிறாள் என்று மீனாட்சி விதம் விதமாகச் செய்யச் சொல்ல, வைத்துக் கொடுப்பாள். கூடச் சேர்ந்து மனுபரதனும் மகாக் கரிசனமாய் பல்வேறு உயர்தர உணவு விடுதிகளிலிருந்து, அவள் கேட்டவற்றை வாங்கி வரச் செய்வான்.

ஆனால் இதிலெல்லாம், செய்த பாவம் தீர்ந்து விடுமா என்று கருவுவாள் அவள்.

மசக்கை காலம் முடிந்து, பசியும் ருசியும் திரும்பி விட்டதால் மயூரியால் உண்ண முடிந்தது. ஆனால் வயிற்றுக்குச் சாப்பிட்டாலும், 'அம்மாவின் கை ருசி'யை அதுவும் அவளுக்காகவென்று தாயார் தனிப்படச் செய்த சிறப்பைச் சொல்லாமல் அவள் விடுவதில்லை.

அதுவும் அநியாயமாக அவளுக்கு அந்த சுகம் மறுக்கப் பட்டு விட்டதாக முத்தாய்ப்பு வேறு!

வெகுவாக முயன்றும் இந்தப் பாட்டை நிறுத்த முடியாது போகவும் வேண்டும் என்று சொல்கிறாளோ என்று மனுபரதனுக்குச் சந்தேகம் வந்தது.

அவசியமற்று தாய் சிரமப்படுவது தாங்காமல் "விட்டு விடுங்கள் அம்மா. அவளைத் திருப்திப் படுத்த முடியாது" என்றான்.

ஆனால் ''வயிற்றுப் பிள்ளைக்காரிப்பா, என்னென்னவோ ஆசை வரும்; பெற்றவளும் இல்லை. பாவம், நாம்தானே, செய்தாக வேண்டும். சும்மா என்றால் கல்யாணமான கணக்குக்கு, உன் தங்கைக்குச் செய்திருக்க வேண்டியது. அவர்கள் இருவரும்தான் இப்போது பிள்ளை வேண்டாம் என்று பிடிவாதமாய் இருக்கிறார்களே. மருமகளுக்காவது, செய்து விட்டுப் போகிறேன்'' என்றாள் மீனாட்சி.

தாயின் மனம் மகளுக்காக ஏங்குவது புரிய ''அவர்கள் இருவரும் ஒப்பந்தத்தில் போயிருக்கிறார்கள் அம்மா. ஒப்பந்தம் முடிந்து சுகந்தி திரும்பி வந்து விட்டால், அப்புறம் மகளுக்கும், மருமகளுக்கும் மாறி மாறி இந்த சுவரட்சிணைசெய்வதிலேயே ஆள் மெலிந்து விடப் போகிறீர்கள்'' என்று சுகமான ஒரு கற்பனையை மனுபரதன் தூண்டி விட அவரது முகமும் மலர்ந்தது.

ஆனால் மருமகளுக்காகச் செய்வதை அந்தத் தாய் விடுவதாகவும் இல்லை. ''ஏதோ வயிறு காயாமல் சாப்பிடுகிறாளே, அதுவே போதும்'' என்று திருப்திப் பட்டாள்.

இதைப் போலவே, வலி வேதனைகளின் போதும், யார் உதவியையும் மயூரி ஏற்பதில்லை.

மனுபரதன் காதில் விழும்படி, ''அம்மா இருந்திருந்தால் எனக்கு வலிக்கும் இடம் பார்த்துப் பிடித்து விட்டிருப்பார்கள். தலைவிதி. தனியே கிடந்து தவிக்க வேண்டியிருக்கிறது. எல்லாம் நான் பெண்ணாகப் பிறந்த பாவம்'' என்பாள்.

''எங்கே வலிக்கிறது என்று சொல். நான் தடவி விடுகிறேன்'' என்று அவன் முன் வந்தான்.

''கண்டவர்கள் தொட்டால் பிடிக்காது என்று உங்களிடம் முன்பே சொல்லியிருக்கிறேன்'' என்றாள் அவள் எடுப்பாக.

இருமுறை பொறுமை காத்தவன், அடுத்த தடவை ''கணவனைக் கண்டவன் என்று சொல்ல முடியாது மயூரி. அத்தோடு என் தொடுகை அன்றைக்கு உனக்கு அப்படி ஒன்றும் அடியோடு பிடிக்காததாக இருக்கவில்லை'' என்று ஒரு மாதிரிக் குரலில் சொல்லி விட்டான்.

இந்தப் பதிலை எதிர்பார்த்திராத மயூரியின் முகம் குபீரெனக் கன்றிக் கறுத்தே போயிற்று.

இன்று வரை மனுபரதன் அந்த இரு நாட்களையும் பற்றிப் பேசியதில்லை.

அவன் நடந்து கொண்ட முறை மகாக் கேவலம் என்பதால், அவனே அதை மறக்க மறைக்க முயல்கிறான் என்று அவள் கணித்திருந்தாள். எனவே அதுவும் தனக்கே இன்னோர் ஆயுதம் என்று எண்ணி ஜாடை மாடையாகப் பயன்படுத்திக் கொண்டு இருந்தாள்.

ஆனால் திடுமென இப்படித் திருப்பியடித்து விட்டானே!

அவன் பேச்சு முழுப்பொய் என்று ஒரேயடியாக அவளால் மறுக்க முடியவில்லை. ஆனால் அன்றைக்கு அவள் வேறு என்ன செய்திருக்க முடியும்? அன்றைய நிலைமையையும் அவளது அறியாத தன்மையையும் பயன்படுத்திக் கொண்டு விட்டு, அவன் என்ன பேச்சுப் பேசுகிறான்?

இத்தனைக்கும் மேலாக அவளுடைய பெற்றோரின் மரணத்திற்கு காரணமாக இருந்து விட்டு!

ங்களுக்கு வெட்கமாக இல்லை...'' என்று
தும், குரல் கம்மி, சத்தமே எழாமல்
துப் போயிற்று.

தானோ, தொடர்ந்து எதையும் கூறி மேலும்
அவளை வைக்காமல், அவனும் அங்கிருந்து விலகிச்
சென்று விட்டான்.

தொடர்ந்த சில தினங்கள், மயூரி கிட்டத்தட்ட மௌன விரதம் காத்தாள் எனலாம்.

மிகவும் தேவை என்றால் தவிர வாயே திறப்பதில்லை.

ஆனால் உள்ளூரக் குமைந்து கொண்டேதான் இருந்தாள். தப்பை அவன் செய்து விட்டு அவளைக் குன்ற வைத்து விட்டானே? வார்த்தைக் குண்டுசிகள் அவனுக்கல்லவோ பயன்பட்டு விட்டன.

அதேபோல, அவனை எப்படிக் குன்ற வைப்பது? பதில் சொல்ல முடியாமல், அவனும் திணற வேண்டாமா? திருப்பிப் பேச முடியாமல், அவனும் வாயடைத்துப் போக வேண்டுமே?

அவள் தேடிக் கொண்டிருந்த வாய்ப்பு ஒன்று விரைவிலேயே வந்து சேர்ந்தது.

மாலைச் சிற்றுண்டியின்போது யாரோ திருப்பித் தர வேண்டிய பணம் பற்றிய பேச்சு வந்தது.

''ரொம்பச் சேர விடாதே பரத். அப்புறம் வசூல் பண்ணுவது இன்னும் கடினமாகி விடும்'' என்று மகனுக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார் குருபாதம்.

ஒரு வார்த்தை விடாமல் அப்படியே உள்ளே பூட்டி வைத்தாள் மயூரி.

தனிமை கிடைத்ததும், ''மீன் குஞ்சுக்கு உங்கள் அப்பா நீந்தக் கற்றுக் கொடுக்கிறாரே'' என்றாள் கிண்டலாக.

''எதைச் சொல்கிறாய்?''

''கடன் வசூலிப்பது பற்றித்தான். வசூல் செய்வதில்தான் நீங்கள் மன்னனாயிற்றே. ஒருவேளை அந்தக் கடனாளிக்கு மகள் இல்லையோ?'' என்று எகத்தாளமாகக் கேட்டாள் அவள்.

கை முஷ்டி இறுக, ஆத்திரமாக அவளை முறைத்தான் மனுபரதன்.

13

கோபம். வெறும் கோபம். அவளுக்குப் பதில் சொல்ல முடியாததால் வந்த கோபம்.

நெஞ்சு கொஞ்சம் படபடத்த போதும் உள்ளம் துள்ளியது மயூரிக்கு.

அவனை அசைத்து விட்டாளே.

''கொஞ்சம் கௌரவமாகப் பேச முயற்சி செய்கிறாயா?'' என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான்.

உள்ளூர உற்சாகத்துடன், ''கௌரவத்தைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்களா? சைத்தான் வேதம் ஓதுவது என்றால் இதுதான் போல. என் கௌரவத்தை அழித்து விட்டு, கௌரவமே பேச, உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று இரு

புருவங்களையும், முடிந்தவரை உயர்த்தி ஆணித்தரமாகக் கேட்டாள் அவள்.

''சொல்ல வேண்டாம் என்று பார்த்தால், சும்மா இருக்கவிடவே மாட்டேன் என்கிறாயே. சொல்லு. அந்த மாதிரி ஒரு மோசமான நிலையில் உன்னை நானா வைத்தேன்? உன் அப்பாதானே? அப்போது, அவர் தப்புவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன். அந்த வாய்ப்பு கூடத் தராமலே அவரைச் சந்தி சிரிக்க வைத்திருக்க வேண்டும் என்கிறாயா? அத்தோடு அப்படி கௌரவம் பார்க்கிறவள், என்ன செய்வது என்று நேரே உன் தந்தையிடமல்லவா போய்க் கேட்டிருக்க வேண்டும்? ஒருவேளை அவரது பதிலும் ஒப்புதலாகவே இருந்திருக்கலாம்.''

கொதிப்புடன் ''அப்பாவைப் பற்றி நீங்கள் பேசாதீர்கள்'' என்று கிரிச்சீட்டாள் மயூரி.

''ஷ்.. மெல்லப் பேசு. எனக்கு மட்டும்தானே கேட்க வேண்டும்?''

தாழ்ந்த குரலில், அவன் அதட்டியதைக் கவனியாதவள் போலப் பேச்சைத் தொடர்ந்தாலும் மயூரியின் குரலும் தணிந்திருந்தது. ''உங்களால் என் அப்பா இறந்தது. பெண்ணின் மானத்தை விலை பேசுகிற உங்களுக்கு மானம் பெரிதென்று கருதி, உயிரை விட்ட அவரைப் பற்றிப் பேசும் தகுதி கிடையாது'' என்று ஆத்திரத்தோடு அடிக் குரலில் சீறினாள்.

''உயிரை அவரே விட்டாரா? இது என்ன புதுக்கதை?'' என்று வியப்புடன் வினவினான் மனுபரதன்.

''கதையல்ல நிஜம். என் அப்பா ஓட்டி இதுவரையிலும் ஒரு விபத்து கூட நேர்ந்ததில்லை. வேண்டும் என்றுதான் காரை விபத்துக்கு உள்ளாக்கி இருக்கிறார்'' என்று மயூரி அறிவித்தாள்.

இன்ஷ்யூரன்ஸ் பற்றித் தெரிவிக்க அவளுக்கு மனமில்லை. அதிலுள்ள தியாகத்தை மதியாமல் இதிலும் 'ஏமாற்றா?' என்று மனுபரதன் கேட்கக் கூடும் அல்லவா?

''இதுவரை விபத்து நேர்ந்தது இல்லை என்பதால் மட்டுமே இது விபத்தல்ல என்று சொல்ல முடியாது. எதற்கும் முதல் தடவை என்று ஒன்று உண்டு'' என்றான் அவன் ''ஒரு சிறு தவறுதலில்..''

முதல் தடவை.

அந்த வார்த்தை மனதைத் தாக்க ''அப்படித்தான் தெரிகிறது'' என்று பெரிதாக விட்டிருந்த வயிற்றைப் பார்த்தாள் அவள்.

முதல் தடவையாக ஒரு பெண்ணைப் பற்றிய... அதாவது அவளைப் பற்றிய மனுப்ரத்னின் கணிப்பும் தவறித்தான் போயிருக்கிறது. 'பாதுகாப்போடு வந்திருப்பாள்' என்று எண்ணியதாகச் சொன்னானே? அவன் அறிந்த மற்ற பெண்களைப் போல் மதிப்பிட்டிருக்கிறான். அவனது முதல் சறுக்கலில் இந்தக் குழந்தையே உருவாகி விட்டதே?

அவன் தலையசைத்து ஏதோ சொல்லத் தொடங்குமுன், ''ஊகூம். நீங்கள் பெண்ணைத் தொட்டதே இதுதான் முதல் தடவை என்று தப்பாக எண்ணி விட மாட்டேன். பிள்ளை வந்ததை மட்டும்தான் சொன்னேன். மற்றதுதான் எப்போதுமே

நடக்குமே. தேவைப்படுவது, ஒரு பெண் மட்டும்தான்'' என்றாள் எகத்தாளமாக.

''எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் படுக்கைக்கு அழைக்கிற பெண் பித்தன் நான் அல்ல என்று, உன்னிடம் எத்தனை தரம் எடுத்துச் சொன்னாலும், அதை நீ நம்பப் போவது இல்லை என்றாலும் அதுதான் உண்மை'' என்றான் மனுபரதன் அழுத்தமான குரலில்.

''ஓ.கோ. என்னைக் கண்டதும்தான், ஏகபத்தினி விரதன், ஸ்ரீராமச்சந்திரப் பிரபுக்கு ஆசை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி விட்டதாக்கும். இதை என் மேல் கரை காணாக் காதல் என்று எண்ணி நான் உங்கள் காலடியில் விழுந்து கிடப்பேன் என்று எண்ணமா?'' என்று ஏளனம் செய்தாள் அவள்.

முகம் இறுக ''அப்படி அல்ல'' என்றான் அவன். நிதானமாக, ''உன் பேச்சிலும் அலட்சியமான நிமிர்விலும் எனக்கு ஒரு சுவாரசியம்... ஓர் ஈர்ப்பு இருந்தது. நியாய... அநியாயம் பற்றிய எண்ணமே இல்லாமல் தந்தைக்காக, சாதாரண நடைமுறை மரியாதையைக் கூடத் தூக்கி எறிந்து நீ என்னை விரட்டிய விதம், புதுமையாக என்னைக் கவர்ந்தது. மறக்க முடியாமல்..'' என்றவன், தோளைக் குலுக்கி, ''என்ன பிரயோஜனம்? நான் எதைச் சொன்னாலும், நீ அதை நம்பப் போவது இல்லை. விடு'' என்று தன் விளக்கத்தை இடையிலே முடித்தான்.

''நம்பும்படியாக எதையும் சொல்ல முடியவில்லை என்று சொல்லுங்கள்'' என்றாள் அவள் பதிலுக்கு. ''ஆனால் ஒன்று புரிகிறது. அன்றே என் நிமிர்வை நாசமாக்கவும் திட்டம் போட்டு விட்டீர்கள்'' என்றாள் வெறுப்பாக.

மீண்டும் தலையசைத்து ''உனக்கு இது புரியாது'' என்றான் மனுபரதன்.

ஏனோ?

'சுள்'ளென்று தோன்றிய எரிச்சலில் ''ஆமாம். கல்லூரியில் மூன்றே ஆண்டுகள்தானே படித்தேன். இரண்டாண்டு மேல் படிப்பையும் முடித்திருந்தால் கூடக் கொஞ்சம் புத்திசாலியாகி உங்கள் பேச்சும் கூடப் புரிந்திருக்கும்'' என்றாள் அவள் ஏளனமாக.

லேசாக முறுவலித்தவன் மேலே ஒன்றும் பேசாமலே எழுந்து சென்று விட்டான்.

வெகு நேரம் அந்த முறுவல் குறுகுறுப்பாய் அவளை உறுத்திக் கொண்டே இருந்தது.

அதில் என்ன இருந்தது? ரசனை நிச்சயமாக இருந்தது.

எதை ரசித்தான்? அவள் பேச்சையா? எந்தப் புத்திசாலிக்கும் உன் பேச்சுப் புரியாது. ஒத்துக் கொள்ள முடியாத உளறல் அது என்ற அவளது குத்தலை அவனால் எப்படி ரசிக்க முடியும்?

ஆனால் ஒரேயடியாக அப்படியும் சொல்வதற்கில்லை. அன்று துச்சாதனனோடு அவனை ஒப்பிட்டதைக் கூட மோனை நயம் என்று ரசித்து சிரித்தவன்தான். இப்படிப்பட்டவன் ஒழுங்காய் நல்ல முறையில் கணவனாகியிருந்தால் கேலியும் கிண்டலுமாக வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

பெருமூச்சு கூட வந்தது மயூரிக்கு.

தலையை உலுக்கி, அந்தப் பயனற்ற சிந்தனைகளில் இருந்து மனதை நிகழ்வுக்குத் திருப்பிக் கொணர்ந்தாள்.

அவன் பார்வையில் ரசனையோடு கூட என்ன இருந்தது?

சிறு வருத்தம்? கொஞ்சம் ஏக்கம்?

அவளைப் போலவே 'நல்லபடியாக இந்தத் திருமணம் நடந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே' என்று மனுபரதனும் நினைத்தானோ?

இருக்குமோ என்று எண்ணமிடும்போது "சேச்சே! இந்த வில்லனுக்கா? ஊகூம். இருக்கவே இருக்காது" என்று உள்ளூர உறுதிப்பட்டும் போயிற்று.

மயூரி மனுபரதன் திருமணத்தை இருவர் படங்களையும் போட்டு திருமணம் நடந்ததாகப் பத்திரிகைகளில் விளம்பரமாகத் தெரிவித்திருந்தார்கள்.

விளம்பரத்தைப் பார்த்து விட்டு ஓடி வந்த போதும் இனி பழைய மாதிரிப் பழக முடியாது என்பதை மயூரியைப் போலவே மற்றவர்களும் வருத்தத்துடன் உணர்ந்தார்கள். உணர்ந்து விடை பெற்றுச் சென்றார்கள்.

குருபாதத்துடைய குடும்பத்திற்கு, மிக நெருங்கிய உறவினர், நண்பர்களுக்கு ஒரு விருந்து, பணிபுரிகிறவர் களுக்குப் பரிசுகள் என்ற பரபரப்பின்றி திருமணம் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

என்னென்ன வம்புப் பேச்சுகள் வளைய வந்திருக்குமோ, அந்த வீட்டுக்கு நேரில் வந்து அவல் மெல்ல துணிச்சல் யாருக்கும் இருக்கவில்லை.

விழாக்களுக்கும், விருந்துகளுக்கும், மனுபரதனுடைய மனைவியாக வீட்டு மருமகளாக அந்த வட்டத்துள் மயூரியும்

அழைக்கப்படுவதும், அவளும் கலந்து கொள்வதும் வழக்கமாயிற்று.

ஆனால் எந்த விழாவிலும், யாரையும் அவள் தனியே எதிர்கொள்ள நேருமாறு மீனாட்சி விட்டு விடமாட்டாள். அதற்காக யாரையும் அண்ட விடாமல் தடுப்பதும் கிடையாது.

நல்ல விதமாகக் கலந்து பழகினால் குறுக்கே பேசுவது கூடக் கிடையாது. ஆனால் வாயைக் கிண்டவோ, மட்டம் தட்டவோ முயன்றால் பட்டென்று கொடுத்து விடுவாள்.

பார்க்கப் பார்க்க மயூரிக்கு மாமியார் மீது மரியாதையோடு, பிரியமும் ஏற்படத் தொடங்கியது.

மனுபரதனுக்கு அதுதெரியக் கூடாது என்று தன் மன நிலையை வெளிக்காட்டாமல் மறைத்த போதும் மயூரி மீனாட்சியின் அருகாமையை விரும்பியே ஏற்றாள்.

இருவருமாகப் பொதுவான பல விஷயங்களைப் பற்றி உரையாட்த் தொடங்கினார்கள்.

மீனாட்சிக்கு அதிகமாகப் பேசப் பிடித்த விஷயம், அவளுடைய பிள்ளைகள், மகள் சுகந்தியைப் பற்றிப் பேசும் போது ஈடுபாட்டோடு கேட்டிருக்கும் மயூரி, மனுபரதனின் பெயர் வந்தால், மெல்ல நழுவி விடுவாள்.

இந்நிலையில் குருபாதத்தினுடைய நண்பர் வீட்டுத் திருமண விழாவுக்கு எல்லோருமாகச் செல்ல நேர்ந்தது.

விருந்தில் மயூரிக்குப் பிடித்தமான மொச்சைக் கைமாவும், வற்றல் குழம்பும் பரிமாறினார்கள்.

மருமகள் ரசித்து உண்பதைக் கண்டு பரிமாறுகிறவர்களை அழைத்து மயூரியின் இலையில், மறுபடியும் பரிமாறும்படி மீனாட்சி ஏவினாள்.

''என்னம்மா உன் அம்மா செய்த ருசி வருகிறதா? எனக்குத்தான் அந்தப் பக்குவம் கைவரவே இல்லை. பரத் கூடக் கடைசியாக வீணாகச் சிரமப்படாமல் விட்டு விடச் சொன்னான். பிள்ளைத் தாய்ச்சிப் பெண் ஆசைப்படுவதைக் கொடுக்க முடியவில்லையே என்று எனக்குத்தான் வருத்தமாக இருந்தது..'' என்று மாமியார் சொன்னதன் கடைசிப் பகுதி மயூரியின் காதில் படாமல் காற்றோடு போயிற்று.

மேலும் மேலும் செய்து சிரமப்படவேண்டாம் என்று மனுபரதன் தாயைத் தடுத்திருக்கிறான்.

அதாவது மயூரி வேண்டுமென்றே சொல்கிறாள் என்று ஊகித்து விட்டிருக்கிறான்.

அது மட்டுமல்ல, 'விழலுக்கு நீர் இறைத்து ஓய்தல்' போல மயூரிக்காகத் தாயார் உழைத்துக் கஷ்டப்படுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

அதுவே நல்லது. தகுதியற்ற ஒருத்தியிடம் தாய் சிறுமைப்படுவதாக எண்ணித் தடுக்க முயன்றிருந்தால், இன்னமும் நல்லது.

உள்ளூர ஒரு பிடிவாதத்துடன் மயூரி திட்டமிட, மீனாட்சி தன்னையறியாமலே, மருமகளின் திட்டத்துக்கு உதவி செய்தாள்.

14

திருமண விருந்தைச் சாப்பிட்டபின் கணவர், மகனோடு மயூரியை திருமணக் கூடத்தில் சற்று உட்கார்ந்திருக்குமாறு அனுப்பி விட்டு மீனாட்சி கல்யாணச் சமையல் அறைக்குச் சென்று திரும்பினாள்.

அதன் விளைவாக மறுநாள் உணவு மேஜையின் மீது மொச்சைக் கைமா கிண்ணத்தில் அழகாக உட்கார்ந்திருந்தது.

''பக்குவம் எல்லாம் அந்தக் கல்யாண வீட்டுச் சமையல்காரரிடம் முழுமையாகக் கேட்டு வந்துவிட்டேன். மொச்சையை இரண்டு மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து தோலைப் பிதுக்கி எடுப்பதிலிருந்து பொடிசாக வெட்டிய மல்லித் தழையைச் சேர்ப்பது வரை சாப்பிட்டுப் பாரம்மா. உப்பு உறைப்பு கூட, நேற்றுப் போலவே, அதே ருசியில் வந்திருக்கிறது'' என்று மீனாட்சி பெருமையுடன் கூறினாள்.

ஒரு கணம் மயூரிக்கு ஆட்டம் கண்டு விட்டது.

முறையாக வந்த மருமகள் அல்ல. இன்னும் யார் யாரிடம் என்னென்ன மாதிரி சமாளித்துக் கொண்டிருக்கிறாளோ தெரியாது. அது பற்றி இன்று வரை மயூரியின் காது கேட்கப் பெரியவள் ஒரு வார்த்தை முணுமுணுத்தது கிடையாது. இப்போது யாரோ ஒரு கல்யாண வீட்டுச் சமையல்காரரிடம் போய் சமையல் பக்குவம் விசாரித்து வந்து வீட்டில் செய்ய வைத்திருக்கிறாள்.

முகத்துக்கு நேராக இவளை எப்படி அவமதிப்பது?

ஒரு கூர்ப் பார்வையுடன் 'ஏன் சாப்பிட்டுப் பார்ப்பதுதானே?' என்றான் மனுபரதன்.

வாய்ப்பை விட்டு விடாமல் அவனை வருத்த வேண்டும் என்று மனம் துடித்த போதும், மனிதத் தன்மையும் போராட "இப்போது வேண்டாம். நான் அப்புறமாகச் சாப்பிட்டுப் பார்க்கிறேன்" என்றாள் மயூரி. அத்தோடு மேலும் அவன் சீண்டுவதற்கு இடமளிக்காமல், அங்கிருந்து எழுந்து சென்றும் விட்டாள்.

தாயின் முகம் வாடியது பொறுக்காமல் அவள் பின்னோடு சென்று "நாக்கு ருசி அப்புறமாக வேறு மாதிரி ஆகி விடுமாக்கும்?" என்று அவன் ஆத்திரத்துடன் கேட்டான்.

கிடைத்தது வாய்ப்பு என்று "எப்போது சாப்பிட்டால் என்ன? வாயில் வைக்க சகிக்காமல்தானே இருக்கப் போகிறது. அதைச் சாப்பிட்டு வாயையும், வயிற்றையும் வேறு கெடுத்துக் கொள்ள வேண்டுமா என்ன?" என்று தூக்கியெறிந்து பேசினாள் அவள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, அவன் முகம் சிவக்கவும் கெக்கலி கொட்டியது அவள் மனம். அவளது திட்டம் வெற்றி பெறுகிறதல்லவா?

ஆனால் விரைவிலேயே தன்னைச் சமாளித்துக் கொண்டு "உனக்கு நான்தானே எதிரி? அம்மாவை வருத்துவானேன்?" என்று தணிவாகவே கேட்டான் மனுபரதன்.

மீண்டும் மாட்டினாயா என்று உள்ளூர எக்களித்தபடி "சிலர் பெற்றோரைப் பழி வாங்கப் பிள்ளைகளை வருத்துவார்கள். சிலர் பிள்ளைகளைப் பழி வாங்கப் பெற்றோரை வருத்துவார்கள்" என்று பழுத்த போதகர் மாதிரி பெரிதாக வேதாந்தம் பேசினாள்.

"ஓ" என்று அவளை ஆழ நோக்கி, "அது பழிவாங்கல் அல்ல என்று நான் முன்பே சொன்னது இன்னமும் உனக்குப் புரியவில்லை என்று தெரிகிறது. ஆனால் என் அம்மா வருத்தப்படுவதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டேன்" என்று எச்சரித்தான் அவன்.

"என்ன செய்து விடுவீர்கள்?" என்று ஏளனமாகக் கேட்டாள் அவள்.

அவன் தயங்குகையில் "ஏன் வீட்டை விட்டு வெளியே விரட்டி விடுவீர்களா? எனக்கு சந்தோஷம்தான். எனக்கும் இங்கே ஒன்றும் தேனாறு பொங்கி வழியவில்லை. உலகமும்... ப...ர... ந்...து கிடக்கிறது" என்று மேலும் ஏளனம் செய்தாள் மயூரி.

அவனது செய்கையற்ற ஆத்திரம் மேலும் உற்சாகமூட்ட மயூரி மேலும் தொடர்ந்தாள். "அல்லது அடித்து உதைத்து... அப்படி ஏதும் செய்வீர்கள்? ஆனால் அதெல்லாம் எனக்கு உறைக்காது தெரியுமா? நெஞ்சில் இருக்கும் வலிக்கு முன் அதெல்லாம் தூசு. அப்பா தர வேண்டிய பணத்துக்காக, என்னை நாசம் செய்தீர்கள் அல்லவா? அதுபோல உங்களுக்காக, உங்கள் அம்மா படட்டும். அழட்டும். ஏன் பிறந்தோம் என்று தவிக்கட்..."

"ஏய்..." என்று அவளைப் பற்றி அவன் கையை ஓங்கிவிட மயூரி திகைத்தாள்.

மெய்யாகவே அடிப்பானா? இதுவரை அவள் அடி பட்டதே இல்லையே?

அவளையும் அறியாமல் அவளது வெறித்த வழிகளில் பயம் படர்ந்ததோ, ஓங்கிய கை சட்டென இறங்கிவிட அவளை இறுக அணைத்தான் மனுபரதன்.

"ஏன் இப்படிப் பண்ணுகிறாய்? கொலை பாதகத்துக்குக் கூட மன்னிப்பு உண்டு என்கிறார்களே?" என்று குமுறினான்.

அவளுடைய பெற்றோரின் மரணத்துக்குக் காரணம் நான்தானே என்று உணர்ந்து அதற்காக வருந்துகிறானோ? இருக்குமோ? ஆனால் இப்படி அணைத்துக் கொண்டு நின்றால் எப்படி யோசிப்பது?

மயூரி திகைப்பிலிருந்து மீளுமுன்பே, மனுபரதன் அவளை விட்டு விலகி நின்றான்.

ஒரு மூச்செடுத்து "எப்படியானாலும் அம்மாவை நீ வருத்த நான் விட மாட்டேன்" என்று கூறி அங்கிருந்து சென்று விட்டான்.

அவனால் என்ன செய்ய முடியும் என்று மயூரி யோசித்தாள்.

தான் என்ன செய்யக் கூடும் என்பதை மனுபரதன் செயலில் காட்டினான்.

தனிக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்தான்.

திகைத்த பெற்றோரிடம், "இங்கே அவளுக்கு எந்த விதப் பொறுப்போ வேலையோ இல்லை. அடிக்கடி பெற்றோரை நினைத்து ஏங்குகிறாள். 'சும்மா இருக்கும் மனம் சைத்தானின் உலைக்களம்' என்பதற்குச் சரியாக மனதையும் உழப்பிக் கொள்கிறாள். வீட்டுப் பொறுப்பை ஏற்று நடத்தும் போது கண்டதை நினைக்க நேரம் இராதல்லவா? அதற்காகத்தான்" என்று சமாதானம் சொன்னான்.

"அதில்லை பரத் கண்ணா.." என்று மீனாட்சி ஏதோ சொல்லத் தொடங்கிய போது குருபாதம் குறுக்கிட்டார்.

"அதுதான் அவன் பார்த்துக் கொள்வதாகச் சொல்கிறானே, தொழிலை ஏற்று நல்லபடியாக நடத்தவில்லையா? அதுபோலக் குடும்பத்தையும் பார்த்துக் கொள்வான். அத்தோடு இந்த ஊரில்தானே இருக்கப் போகிறார்கள்? தேவைப்படும்போது நாம் உதவக் கூடாது என்று ஒன்றும் சட்டம் இல்லையே. என்னடா பரத்?"

"ஆமாம் அப்பா" என்று பதில் சொன்ன போதும் மனு பரதனின் பார்வை அவரைத் தவிர்த்தது.

மறுத்து எதுவும் சொல்லாமல் கணவனின் முயற்சிகளைப் பார்த்து மயூரி உள்ளூர நகைத்துக் கொண்டிருந்தாள். உலகமே ஓர் உருண்டையான கிராமம் என்று சொல்லத்தக்க அளவுக்கு சுருங்கி விட்டது என்கிறார்கள். இப்போ போய் வெறும் நாலு கிலோ மீட்டர் தூரம் தள்ளி இருப்பதாலேயே அவன் தாயை அவளால் எட்ட முடியாது என்று எண்ணுகிறானே, வேடிக்கைதான்.

பேரக் குழந்தை மீது பேராசை கொண்ட மீனாட்சியை இந்த நாலே நாலு கிலோ மீட்டர் தூரமா தடுத்து நிறுத்தி விடப் போகிறது?

வருவாள். வரட்டும் பாவம்!

புது வீட்டில் பால் காய்ச்சி விட்டு பெரியவர்கள் அவர்கள் வீட்டுக்குத் திரும்பிச் சென்றனர்.

அவர்கள் சென்ற பிறகு "இங்கே என்னை நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். ஆனால் நியாயமற்று

என் பெற்றோரை வாட்ட முடியாது'' என்றான் மனுபரதன் திருப்தியோடு.

''நியாயமற்ற உங்களைப் பெற்றதே அவர்கள் செய்த பெரும் குற்றமல்லவா? அந்தப் பாவத்துக்காக, அவர்கள் என்னென்னவோ அனுபவித்தாக வேண்டும்'' என்றாள் மயூரி அழுத்தம் திருத்தமாக.

அவளை வெறித்து நோக்கி விட்டு, விலகிப் போனான் அவன்.

ஆனால் மயூரி எதிர்பார்த்தது போல், மீனாட்சி தானாக வந்து, அவளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளவும் இல்லை. அது கண்டு மனுபரதன் கொதித்துக் குமுறவுமில்லை.

அப்படியெல்லாம் நிகழக் கூடும் என்று யோசித்து மனுபரதன் தன் தாயாரை அங்கே வராமல் தடுத்து நிறுத்தியிருக்கிறான் என்பதை மயூரியால் ஊகிக்க முடிந்தது.

மாமியார் இங்கு வரவில்லை. வராமல் மனுபரதன் தடுத்து விட்டான். ஆனால் மலை மனிதனிடம் வராவிட்டால், மனிதன் மலையிடம் போக வேண்டியதுதானே? அதாவது மயூரி மீனாட்சியை நாடிச் செல்ல வேண்டியதுதான்.

செல்வதற்கு மனுபரதன் கார் தராவிட்டால் என்ன? ஒரு 'கால் டாக்சி' வரவழைத்து மயூரி அடையாறு செல்வதை யாரால் தடுக்க முடியும்?

அடையாறு பங்களாவுக்குள் செல்லும் வரை மயூரி திட்டமிட்டது போலவேதான் நடந்தது.

ஆனால் அதன்பின் எல்லாம் மாறிவிட்டது.

கால் சுளுக்கி அப்பமாய் வீங்கியிருக்க, மீனாட்சி முக்கி முனகிக் கொண்டு சோஃபாவில் சாய்ந்திருக்க குருபாதம், இன்னொரு சோஃபாவில் ஓரமாய் உட்கார்ந்து சொன்னால் கேள், மீனா. ஒரே ஒரு நாள் ஹோட்டலில் சாப்பிட்டால் ஒன்றும் குடி முழுகி விடாது'' என்று அதட்டிப் பேசிக் கொண்டிருந்தார்.

''காலில் என்ன அத்தை?'' என்று கவலையுடன் மயூரி கேட்க ''சுளுக்கு'' என்றாள் மீனாட்சி ஈன சுரத்தில்.

''தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது சண்டெலி போல ஒன்று குறுக்கே ஓடியிருக்கிறது. அதை மிதித்து விடாமல் அவசரமாக நகர்ந்ததில் தடுமாறி கால் பிசகி விட்டது. டாக்டரிடம் ஃபோனில் கேட்டு, அவர் சொன்னபடி இப்போ ஐஸ் கட்டி வைத்து ஒத்தடம் கொடுத்தாயிற்று. 'எலாஸ்டிக் பான்டே'ஜோடு மருத்துவர் வந்து கொண்டிருக்கிறார். இன்று ஒரு நாள் காலை அசைக்காமல் வைத்திருந்தால் சரியாகிப் போகும். அவ்வளவுதான் விஷயம்.''

''இன்னும் கொஞ்சம் மிச்சமிருப்பது போலத் தோன்றுகிறது. இதற்கு ஹோட்டலில் எதற்காகச் சாப்பிட வேண்டும்? சமையல்காரன் எங்கே?'' என்று மயூரி விசாரித்தாள்.

''இன்னைக்குப் பார்த்து லீவு. மாலை வண்டியில்தான் திரும்பி வருகிறான். அதனால்தான், இன்றுமட்டும் வாங்கி வந்து சாப்பிடலாம் என்றேன்.''

''அது எப்படிம்மா? மாமாவுக்குப் பத்தியம். வெளிச் சாப்பாட்டை எப்படிக் கொடுப்பது? மெள்ள, சமையல் அறைக்குப் போய் உட்கார்ந்திருந்தே செய்து விடுகிறேன் என்றால் கோபப்படுகிறார்'' என்றாள் மாமியார்.

''ஒருநாளில் ஒன்றும் உயிர் போய் விடாது. வேண்டுமானால் பட்டினி கிடந்து விடுகிறேன்.''

''என்ன பேச்சு இது?''

பொதுவாக ஒதுங்கிப் போகும் மருமகள் முன்பே முன்னிலையிலேயே எல்லாப் பேச்சும் நடந்தது.

இந்த இருவர் இதயங்களும் ஜெராக்ஸ் காப்பியோ, என்று மயூரி பலமுறை மனதுள் ஆச்சரியப்பட்டிருக்கிறாள். இவர்களும், நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்று அறிந்த போது வியப்போடு ஏதோ ஒரு விதமாக ஆறுதலாகவும் இருந்தது. எனவே புன்னகையோடு கை உயர்த்தினாள்.

''இரண்டு நல்ல மனிதர்களின் ஆசையும் நிறைவேறப் போகிறது. மாமா பட்டினி கிடக்க வேண்டாம். ஹோட்டலில் சாப்பிட வேண்டாம். இன்று என் சமையல் எனக்கும் பிரமாதமாகச் சமைக்கத் தெரியாது. அதனால் அத்தை சொல்லச் சொல்ல அதே போலச் செய்ய முடியும். செய்கிறேன்'' என்றாள் சின்னவள்.

பொதுவாக இந்த உறவு அழைப்புகள் எல்லாம் மயூரியின் வாயில் இலகுவாக வருவதில்லை. 'தீராது' என்கிற வேளைகளில் அடுத்தவர் முன்னிலையில்தான் அவள் 'அத்தை, மாமா' என்று அவர்களை அழைப்பதே. இப்போது அவள் இயல்பாய்க் குறிப்பிடவும் பெரியவர்கள் இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இந்த நிலையில் அடுப்பின் முன் நிற்க வேண்டுமா என்று சற்றுத் தயங்கி விட்டு அவளது பிடிவாதத்தில் இருவரும் ஒப்புக் கொண்டனர்.

வெறும் ரசம் சாதமும், பொரியலும்தான்.

அதிலும் தாளிக்காமல், வெறுமனே வெந்ததை மாமனாருக்கு எடுத்து வைத்து விட்டு, மீதியைத் தாளித்து மூவருமாகச் சேர்ந்து உட்கார்ந்தே பசியாறினார்கள்.

குருபாதம் ஓய்வெடுக்கச் சென்று விட இரு பெண்களுமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சு வாக்கில் ''பரத்தும் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்'' என்று மீனாட்சி கூற மயூரியின் கண்களில் ஒளி மங்கியது.

மெல்ல எழுந்து ''அப்போ நான் கிளம்பட்டுமா, அத்தை மாலைச் சிற்றுண்டிக்கு இட்லி அவித்து செல்லோவில் வைத்திருக்கிறேன். பருப்புத் துவையல் 'ஃபிரிஜ்' ஜில் இருக்கிறது. இரவுக்குத்தான் சமையல்காரன் வந்துவிடுவான் என்கிறீர்களே. அப்படி வராவிட்டால் ஃபோன் பண்ணுங்கள். அங்கிருந்து ஏதாவது அனுப்புகிறேன்'' என்றவள் ஏதோ நினைத்து ''அனுப்பித் தொலைக்கிறேன்'' என்று முடித்தாள்.

வியந்து நோக்கி விட்டு ''கொஞ்சம் பொறும்மா'' என்று மருமகளின் கையைப் பற்றி நிறுத்தித் தானும் எழுந்தாள் மீனாட்சி. ''நீ எவ்வளவோ நல்ல பெண்தான். ஆனாலும், கெடுதலாக நினைக்க வேண்டும் என்று ஏன் முயற்சிக்கிறாய்? உனக்கும் பரத்துக்கும் இடையில் என்னென்னவோ நடந்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் முடிந்த கதை அல்லவா? இனியும் என்ன? பெண் விஷயத்தில் அவன் கொஞ்சம் இப்படி அப்படி என்று கேள்விதான். அதனாலேயே பெண்ணைப் பார்க்கவேணும் வா என்று வற்புறுத்தி அழைத்து வந்தேன். இன்னொரு பெண்ணைப் பார்க்க வந்தான் என்று...

''ஒருநாளில்
வேண்டுமா

''

135

கட்டு மயூரியின் முகத்தைப்

வ இல்லை.

பன்று பதில் சொல்வது?

ன் மகனின் வண்டவாளம் பார்'
ித்து விடலாம். ஆனால் இந்தப்
பெற்றவளை ு போகும். மருமகளைப் பார்க்கும்
போதெல்லாம் மனம் குனறிப் போவாள்.

எதற்கு? என்ன லாபம்?

''அது... நீங்கள் நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. கொஞ்ச காலம் போனால் எல்லாம் தானாகச் சரியாகி விடும்'' என்று முடித்து விட்டாள் சின்னவள்.

விஷயம் இத்துடன் முடியாது.

மனுபரதனுடைய பெற்றோரை மாமியார் மாமனாராக ஏற்று மயூரி அன்பு செலுத்தத் தொடங்கி விட்டதாகத் தோன்றும்.

அவளது திடம், இன்னொரு தரம் முயற்சிக்கக் கூட முடியாமல் படுதோல்வி அடைந்து விடும்.

பழிவாங்கும் படலமும், அதோகதிதான்.

போகிறது என்று சும்மா விடவும் மயூரிக்கு மனமில்லை.

மனுபரதனை அப்படியெல்லாம் சும்மா விடக் கூடாது.

15

மயூரி எதிர்பார்த்ததுபோலவே அன்று மாலை வீடு திரும்பி வந்தபோது மனுபரதனின் முகம் மலர்ந்திருந்தது.

டெலிஃபோனில் விஷயம் போயிருக்கிறது.

கவனியாதவள் போல வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தவளிடம் சென்று ''மிகவும் நன்றி மயூரி'' என்றான் அவன்.

''எதற்கு?'' என்று அசட்டையாகக் கேட்டாள் மயூரி.

''தக்க தருணத்தில் அம்மா அப்பாவுக்கு உதவி செய்ததற்கு. அடுப்பு முன்னே நின்று சமையல் எல்லாம் செய்தாயாமே. அம்மாவுக்கு ஒரே பெருமை. அம்மா விஷயத்தில் உன் மனம் மாறி விட்டது எனும் போது எனக்கும் நிம்மதியே'' என்றான் அவன்.

நாள் முழுவதும் யோசித்து வைத்தது அல்லவா? தயங்காமல் ''என் மனம் மாறியதாக யார் சொன்னது? அப்படி ஒன்றும் இல்லையே'' என்றாள் மயூரி.

''பின்னே அங்கே போய் அவ்வளவு உதவிகள் செய்வானேன்?''

''முதலில் நான் அங்கே ஏன் போனேன் என்று யோசித்தீர்களா?''

அவன், அவளை வெறித்து விட்டு ''அப்படிப் போனவள் ஏன் சும்மா இருந்தாயாம்?'' என்று கேட்டான்.

''ஜராசந்தன் கதை தெரியுமா, உங்களுக்கு? மகாபாரதத்தில் தரும புத்திரர் செய்த ராஜசூய யாகத்துக்காக, கிருஷ்ணரும், பீமனும், அர்ஜுனனும் அவனிடம் சென்று 'எங்களில் ஒருவரோடு போரிடு' என்றார்களாம். கண்ணன் இடையன், அர்ஜுனன் சின்னவன் என்று அவர்களை விட்டு விட்டு மகாபலசாலி என்று தெரிந்திருந்தும், பீமனோடு போரிட்டானாம், அந்த மகா வீரன். சம பலம் இல்லாத நிலையில் இருக்கும் எதிரியை மடக்கி அடிக்கும் கோழைத்தனம் எனக்கும் கிடையாது'' என்று தோளைக் குலுக்கினாள் அவள்.

அவன் அப்படிப்பட்ட கோழையாம். அவளை முதலில் பணிய வைத்ததைக் குறிப்பிடுகிறாள்.

கண் மூடித் திறந்து ''அம்மா உனக்கு எதிரி அல்லவே'' என்றான் அவன்.

''கர்ணன் நல்லவன்தான். ஆனால் அவன் சேர்ந்திருந்த இடத்தால் பாண்டவர்களுக்கு எதிரிதானே?'' என்றாள் அவள் பதிலுக்கு.

உன்னைச் சார்ந்த எல்லோருமே எனக்கு எதிரிகள்தான் என்பவளிடம் என்ன பேசுவது?

ஒன்றும் சொல்ல மாட்டாமல் ''இந்தக் காலப் பெண்ணாக இருந்தாலும் இதிகாசங்களைக் கரைத்துக் குடித்திருக்கிறாய் என்று தெரிகிறது'' என்றான் எரிச்சலோடு.

''பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' படித்து விட்டு அந்த வேகத்தில் மகா பாரதக் கதை முழுவதையும் அறிய வேண்டும் என்று ராஜாஜியின் 'வியாசர் விருந்தை' படித்துத் தெரிந்து

கொண்டேன். நீங்கள்... பாரதியில் 'ஆத்திரம் கொண்டவர்க்கே சாத்திரம் ஏதுக்கடி'யோடு புத்தகத்தை மூடி வைத்திருப்பீர்கள்'' என்றாள் அவள் கிண்டலும் குத்தலுமாக.

மறுக்க முடியும். பாரதியில் அவன் ரசித்த எத்தனையோ பாடல்களைப் பற்றியும் அதே மகாபாரதத்தில், அவன் திருப்பித் திருப்பிப் படித்த 'விதுர நீதி' பற்றியும் எடுத்துரைத்து, அவனது ரசனை பற்றிய அவளது கருத்தை தவறு என்று அவனால் நிரூபிக்க முடியும்தான். ஆனால் அதனால் என்ன பயன்? இன்னொரு வழியைக் கண்டுபிடிப்பாள்.

அத்தோடு இன்றையப் பிரச்சினையும் அப்படியேதான் இருக்கப் போகிறது. அது தீர வேண்டுமானால் அவளாக மனம் இரங்கினால்தான் உண்டு.

காரணம் என்னவாகவும் இருக்கலாம். மயூரி அடுத்து மீனாட்சியிடம் எந்த விதத் தகராறும் பண்ணவில்லை. சும்மா போய்ப் பார்த்து வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டுத் திரும்பி வந்தாள்.

சமையல்காரன் திரும்பி வந்து விட்டதால் அங்கே அவள் செய்வதற்கும் பெரிதாக எதுவும் இருக்கவில்லை. சும்மா உட்கார்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்பி வருவாள்.

கிளம்பும் போது மனுபரதனுக்குத் தகவல் கொடுத்து விட்டுப் போவாள்.

தாயாரிடம் எப்படி, என்ன பேசுகிறாளோ என்று அவள் திரும்பி வரும் வரை அவன் மனம் அனுபவிக்கும் தவிப்பே, போதுமான பழி வாங்கல் என்று எண்ணினாளோ, என்னவோ?

அவன் தவிக்கத்தான் செய்தான். ஒன்றல்ல, பல விதமாய்த் தவித்தான். அந்தத் தவிப்பை மயூரியிடம் காட்டாமல் மறைப்பதே, அவனது பெரும் தவிப்பாய் இருந்தது.

இந்நிலையில் ஒரு நடன அரங்கேற்றத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. குருபாதத்தினுடைய நெடுங்கால நண்பர் ஒருவருடைய முதல் பேத்தி ஆடுவதால் கட்டாயம் செல்லும்படி இருந்தது.

அதற்குள்ளாக மீனாட்சியின் காலைச் சிரமப்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல என்பதால் இளைய தலைமுறை நாட்டியம் பார்க்கச் சென்றார்கள்.

மயூரி மனமற்று, ஒருவாறு கிளம்பிச் சென்ற போது நடனம் தொடங்கி, ஓரளவு நேரமாகி விட்டிருந்தது.

புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதிஸ்வரம் எல்லாம் முடிந்து வர்ணத்துக்கு ஆடிக் கொண்டிருந்தாள் பெண்.

பின் பக்கமாகவே, ஓர் ஓரமாக இருவரும் அமர்ந்தார்கள்.

மனுபரதனைத் தாக்காமல், சும்மா இருக்கும் தன் மடத்தனத்தை எண்ணித் தன் மீதே எரிச்சல் பட்டுக் கொண்டிருந்ததால் மயூரி சற்று விரைப்பாகவே இருந்தாள்.

இறுகிப் போய் அமர்ந்திருந்தவள் நடனத்திலும் பாட்டிலும் ஈடுபட்டு மெல்ல நெகிழ்ந்தாள்.

கால்கள் தாமாகத் தாளமிடத் தொடங்கின.

தாளமிட்ட கால்கள் பழகிய பாணியைக் கண்டுபிடிக்க யார் என்று எட்டிப் பார்த்தாள்.

நட்டுவாங்கம் செய்து கொண்டிருந்தவர் அவளுடைய குருவே. சற்று அதிக வயதானவர். எனவே பெரும்பான்மை யாகச் சீடப் பிள்ளையிடம் தள்ளி விட்டு, சில சிக்கலான முக்கியமான ஜதிகளை மட்டும் அவரே சொல்லுவார்.

இடைவேளையின் போது குருவும் மயூரியைக் கண்டுவிட்டு அவளிடம் வந்து பேசினார்.

''என்னம்மா நீதான் சலங்கை பூஜைக்குப் பிறகு அரங்கேற்றம் பண்ணாமலே ஏமாற்றி விட்டாய். உன் மகளுக்காவது முழுதாய்ச் செய். குரு நான்தான். நினைவிருக்கட்டும்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

மயூரிக்கு லயிப்பு கலைந்து போயிற்று.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகத் திடீர் என்று நாட்டியத்தில் ஆசை வந்ததும், குருவிடம் பாடம் தொடங்கியதும், முத்திரை வெகு சுத்தமாகப் பிடிக்கிறாள், பாம்பு நடனத்துக்கு மிக அழகாக வளைகிறாள் என்றெல்லாம் பாராட்டுப் பெற்றதும், நடனம் தொடர்பான இன்னும் என்னவெல்லாமோ முட்டி மோதிக் கொண்டு தலையை நீட்டின.

அமைதி கலைந்து விட மயூரி வீட்டுக்குச் செல்ல விரும்பினாள்.

ஆடிய சிறுமியுடைய தாத்தாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.

மயூரியின் தோற்றத்தைப் பார்த்ததும் நிறுத்தி வைக்க முயற்சி செய்யாமல் அவரும் விடை கொடுத்தார்.

வீட்டை அடைந்து உணவு முடிந்து உட்கார்ந்திருக்கும் போது மனுபரதன் பேச்சுக் கொடுத்தான். ''உனக்கு நடனம் கூடத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''மயூரி என்று பெயர் வைத்தவர்கள், நாட்டியம் கற்றுக் கொடுக்க மாட்டார்களா?'' என்று சிறு எரிச்சலோடு வினவினாள் அவள். ''என் பெற்றோருக்கு நாட்டியத்தில் நான் உலகப் புகழ் பெற வேண்டும் என்று ஆசை. கடைசியில்..'' என்று குனிந்து பெரிதாகத் தெரிந்த வயிற்றை வெறுப்புடன் பார்த்தாள். ''சே!'' என்றாள் முத்தாய்ப்பாக.

''குழந்தை பிறந்த பிறகு ஆடு'' என்று யோசனை சொன்னான் மனுபரதன்.

''யார் பார்த்து ரசிக்க?'' என்று எரிந்து விழுந்தாள் மயூரி. ''பார்த்துப் பார்த்து ரசித்த பெற்றோரையே கொன்று விட்டீர்களே..''

பொறுமையிழந்து ''அது தற்செயலாக நேர்ந்த விபத்து என்று போலீஸ் அறிக்கையே சொல்கிறது'' எரிச்சலுடன் நினைவூட்டினான் மனுபரதன்.

''நான் நம்ப மாட்டேன். உங்களால் எந்த அறிக்கையையும் எப்படியும் மாற்ற முடியும்'' என்று பிடிவாதமான குரலில் கூறினாள் மயூரி.

தோளைக் குலுக்கி விட்டுச் சும்மா இருந்தான் அவன்.

அதுவும் அவளுக்கு ஆத்திரத்தையே அளித்தது. இன்னொரு விதமாய்த் தாக்கினாள்.

''மகளை' என்று குருஜி சொன்னாரே, மெய்யாகவே மகளாயிருந்து இப்படி எவன் கையிலாவது வதைப் பட விடுவதா?'' என்று வேண்டும் என்றே உரக்க யோசித்தாள்.

''அந்த நிலைமை என் மகளுக்கு நேர நான் விட மாட்டேன்'' என்றான் மனுபரதன் அழுத்தமான குரலில்.

உள்ளூர உற்சாகத்துடன் ''அதெப்படிச் சொல்ல முடியும்? உங்களை மாதிரி உலகத்தில் எத்தனையெத்தனை ஆண்கள் இருக்கிறார்களோ?'' என்று அம்பெய்தாள் மயூரி.

ஒரு பார்வை பார்த்து விட்டு ''எத்தனையெத்தனை ஆண்கள் எப்படியெப்படி இருந்தாலும், உன் தந்தைபோல் என் மகளை நான் இக்கட்டில் நிறுத்த மாட்டேன். உன் அப்பா பற்றிப் பேசக் கூடாது என்று கத்தாதே. காலம் வெகுவாக மாறி விட்டது. 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த' நிலை இப்போது கிடையாது. என்ன பார்க்கிறாய்? பாரதியின் மற்ற பாடல்கள் பற்றி, எனக்கும் தெரியும். அந்த வரகவி கூறியது போலப் பெண்கள் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழில் என்று செய்யும் போது வீட்டுப் பெண்களுக்கும், அது என்னவென்று தெரிந்திருக்க வேண்டும். வெறுமனே, பூப்பறிக்கிற மாதிரி பணத்தைக் கொண்டு வருவதில்லை என்று தெரிய வேண்டும். நாங்கள் என்னதொழில் செய்கிறோம் என்பது என் அம்மாவுக்குத்தெரியும். என் தங்கைக்குத் தெரியும். அதன் லாப நஷ்டம் பற்றியும் கூடப் பொதுப்படையாகத் தெரியும். சமயத்தில் நல்ல ஆலோசனைகள் கூடச் சொல்லுவார்கள். உன் தந்தை மாதிரி ஒளித்து, மறைத்து வைக்கும் போதுதான் தகராறு..'' என்றவனை மயூரி இடைமறித்துப் பேசினாள்.

''அவரது கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி எங்களை வருத்த வேண்டாம் என்று எண்ணியிருப்பார்'' என்று தந்தையின் செயலை நியாயப்படுத்த முயன்றாள்.

''அது குறுகிய காலக் கண்ணோட்டம்'' என்றான் மனுபரதன். ''அதன் பலன் என்ன ஆயிற்று? நான் நம் விஷயத்தைச் சொல்லவில்லை. உன் தந்தைக்குப் பிறகு நீ அனுபவிக்க நேர்ந்த பொருளாதாரத் துன்பங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன்.''

உண்மைதான். 'கடன் கடன்' என்று எல்லோரும் மொய்த்தபோது மலைத்துத் திகைத்ததை நினைக்கையில் கணவன் கூறுவதை ஒத்துக் கொள்ளத்தான் மயூரிக்குத் தோன்றியது.

''ஆனால் இப்போது விஷயம் அதுவல்ல. உன் தந்தை தப்புத் தொழில் செய்ததால் மாட்டிக் கொண்டார். மாட்டிக் கொள்ளவும் மேலே மேலே தப்பு செய்தார். அதையெல்லாம் உன்னிடம் எப்படிச் சொல்லுவார்? அதனால்தான் மறைத்தார்.''

அவன் பேச்சை மறுக்க முடியாமல், ''ஒழுங்கான தொழிலில் நஷ்டமே வராதாக்கும்'' என்று மடக்கினாள் அவள்.

''வரும். ஆனால், அதை மனைவி மக்களிடம் தெரிவிக்கக் கூச வேண்டியதில்லை. பணக் கஷ்டம் வரக் கூடும். ஆனால் குடும்பம் என்றால் என்ன? இன்பத்திலும் துன்பத்திலும் பங்கேற்பது. இன்னல்களையும் சேர்ந்து சமாளிக்கலாம். வசதிக் குறைவு தவிர, வேறு கேவலங்களுக்குப் பயப்படத் தேவையில்லை. அந்தக் கேவலங்களைச் சொல்லி யாரும் யாரையும் மிரட்டவும் முடியாது.''

வாயடைத்துப் போயிற்று அவளுக்கு

அவன் கூறியது சரிதானே. தந்தை தொழிலில் சுத்தமாக இருந்திருந்தால்? இவனை ஏமாற்ற முயற்சித்திராவிட்டால்? இல்லாத பணத்துக்குக் காசோலை கொடுத்திராவிட்டால்?

எல்லாமே தப்பு. மனைவி மக்களிடம் எப்படிச் சொல்லுவார்? சொல்ல நாக் கூசுமே மனைவியிடம் கூடத் தன் பிழையைத் தந்தை சொல்லவில்லையே? சாவுக்குத்தான் துணை சேர்த்தார்.

மனுபரதன் சொல்லுகிற மாதிரி நேர்வழியில் சென்றிருந்தால் நஷ்டமே வந்திருந்தாலும் இப்படி இப்படிச் செய்தேன். இன்னின்ன விதமாய்ப் போய் விட்டது என்று மனம் விட்டுப் பேசத் தைரியம் இருந்திருக்கும். துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் போது சுமையும் குறைந்துபோகும்; உயிரை விடவும் தோன்றியிருக்காது.

எவ்வளவு பெரிய விரயம், எவ்வளவு துன்பம்.

ஒரு தப்பில் என்னென்ன நடந்து விட்டது?

மெல்லத் தலை தூக்கி, ''ஆனால் அதற்காக நீங்கள் என்னை விலை பேசலாமா? அது மட்டும் சரியா?'' என்று கம்மிய குரலில் கேட்டாள்.

''இல்லை, தப்புதான்'' என்றபோது அவன் குரல் கரகரத்தது. ''நான் என் விருப்பத்தை மட்டும் பார்த்தேன். அதை ஒரு வியாபாரமாக நினைத்தேனே தவிர உனக்கும் உணர்வுகள், கருத்துக்கள் உண்டு என்று எண்ணிப் பாராதது பெரிய பிழை என்பது இப்போது புரிந்தது. அதிலும் என் மகளை அந்த நிலையில்... அப்படி நினைத்துப் பார்க்கக் கூடக் கூசும் இந்த நேரத்தில் மிக நன்றாகப் புரிகிறது. என்றாலும் இப்போது இதற்கு நான் என்ன விதமாய்ப் பிராயச்சித்தம் செய்யட்டும், சொல்லு செய்கிறேன்'' என்று வருத்தத்துடன் அவன் கேட்டான்.

அவள் பேசாதிருக்கவும், ''சொல்லு மயூரி. உன் மன அமைதிக்காக நான் எதைச் செய்யவும் தயாராக இருக்கிறேன். இ.10

என்னவென்றாலும் சொல்லு'' என்று தணிந்தே கேட்டான். ''ப்ளீஸ்!''

லேசாகத் தலையசைத்தாள் அவள். ''ஒரு கொலைக்கு ஏதாவது பிராயச்சித்தம் செய்ய முடியுமா? நீங்கள் சொல்லுங்கள். அதுபோலத்தான் இதுவும் மாற்றி அமைக்க முடியாத விஷயம்'' என்றாள் மெல்லிய குரலில். ஆனால் முடிவாக,

''மயூரி..''

சட்டென அவள் முகம் கடுத்தது. செய்யக் கூடாததையெல்லாம் செய்து விட்டுப் பிராயச்சித்தமா?

''என்ன பிராயச்சித்தம்? கிட்டத்தட்ட எட்டு மாதங் களுக்கும் மேலாக இந்த வேதனைப் பட்டுக் கொண்டிருக் கிறேன். இப்போது வந்து மன அமைதி, அது இது என்றால், என்ன சொல்லட்டும்? என் மனம் அமைதி பெற ஒன்றே ஒன்றுதான் செய்ய முடியும். என்னைக் கொன்று விடுவது. அது முடியாது என்றால் விட்டு விடுங்கள். பிரசவத்தின் போது செத்தேன் என்றால் எனக்கு அமைதி கிடைத்து விட்டதாக எண்ணிக் கொள்ளுங்கள்'' என்று கொட்டித் தீர்த்தாள்.

சற்று நிசப்தம் நிலவியது.

அவனிடம் இருந்து எந்த விதமான பதிலும் இல்லாது போகவே விழி திருப்பி அவனைப் பார்த்த மயூரி திகைத்தாள்.

இறுக மூடிய கண்களுக்குள் அவன் என்ன கொடிய காட்சியைக் கண்டு கொண்டிருந்தானோ, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வேதனையை அவனது இறுகிய முகமும்,

விறைத்த உடலும் காட்டவே அவளாலும் சற்று நேரம் ஒன்றும் பேச முடியவில்லை.

ஆனால் அந்தத் துன்ப நிலையிலிருந்து அவன் விடுபடுவதாகவே தோன்றாது போகவும் 'கையை நீட்டி, அவனை லேசாகத் தொட்டு 'ம... மனுபரதன்...'' என்று மெல்ல அழைத்தாள்.

தொட்ட கையை அப்படியே அழுத்திப் பற்றியபடி, சில வினாடிகள் அமர்ந்திருந்தவனின் முகம் மெல்ல இயல்புக்கு வந்தது.

பெருமூச்சுடன் எழுந்து ''அதிக நேரம் கண் விழித்திருக்காதே. மயூரி உனக்கு நல்லதல்ல. போய்ப் படு'' என்று அவளையும் எழுப்பி அழைத்துச் சென்றான்.

அன்றிரவில் தூக்கத்தில் புரண்டு படுத்த மயூரி எதோ ஒரு வேறுபாட்டை லேசாக உணர்ந்தாள்.

ஏசியின் சிறு ஒலி நின்று போயிருந்தது. மேலே சுழலும் மின் விசிறியின் ஓசையும் ''ச்சை... மறுபடியும் மின்சாரத் தடையா? வியர்த்து வடியுமே..'' என்று தூக்கக் கலக்கத்தில் அலுப்புடன் எண்ணமிடும்போதே யாரோ விசிறுவது போலக் காற்றின் அசைவையும் உணர்ந்தாள்.

யார்? மனுபரதனா? வேறு யார் இங்கே வர முடியும்? அரைக் கண்ணால் பார்த்த போது அவன்தான் என்று தெரிந்தது.

அவன் விசிறி, தான் சொகுசாகப் படுத்திருப்பது ஒருமாதிரி இருந்தபோது எழுந்து தனக்காக அவன் ஒன்று செய்வதை ஒத்துக் கொண்டு நன்றியுரைக்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

எனவே கண்களை இறுக மூடிக் கொண்டு மின் தொடர்பு சீக்கிரம் வந்து விட வேண்டும் என்று வேண்டிக் கொண்டு அசையாமல் படுத்திருக்கிறாள்.

எவ்வளவு நேரமோ தன்னையறியாமல் அவள் மீண்டும் உறங்கும் வரை மின்சாரம் வரவும் இல்லை. மனுபரதன் விசிறுவதை நிறுத்தவும் இல்லை.

மறுநாள் அவன் கையில் ஏதோ 'ஆயின்ட்மென்ட்'டை இடக் கரத்தால் எடுத்துக் கொண்டிருந்தான்.

கன்றிச் சிவந்திருந்த வலது கையைக் கண்டபோது மயூரிக்கு மனம் சுட்டது. ''கையில் என்ன?'' என்று தெரியாதது போல வினவினாள்.

''ஏதோ தோல் வழன்றிருக்கிறது'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு இடது கையால் மருந்திட முயன்றான் அவன்.

''நான் தடவி விடுகிறேன்'' என்று அவனது வியந்த பார்வையைத் தவிர்த்தபடி மருந்தை வாங்கித் தடவி விட்டாள் அவள்.

விரல்களிலும், உள்ளங்கையிலும் இருந்த சிவப்பும் அங்கங்கே நீர் கோர்த்திருந்தும், அவன் எவ்வளவு நேரம் விசிறியிருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லின.

ஏன்? திடீர் என்று அப்படியென்ன அன்பு தோன்றி விட்டது? 'மகள்' பேச்சினாலா?

யோசித்துப் பார்க்கும் போது இதற்கு முன்னரும், மனுபரதன் இந்த உதவி அவளுக்குச் செய்திருக்க வேண்டும் என்றே மயூரிக்குத் தோன்றியது.

சில தினங்களுக்கு முன் வியர்த்துப் போய் தூக்கம் கலையத் தொடங்கியதும் பின்னர் சற்று இதமாகி விடத் தூங்கியதும் நினைவு வந்தது. அதன் பிறகே இந்த ஓலை விசிறிகள் வீட்டுக்கு வந்தன. அன்று ஏதாவது பத்திரிகை அட்டை கொண்டு விசிறியிருப்பானோ? பாவம்.

ஆனால் பத்திரிகை கையைப் பாதிக்கவில்லை. இப்போது காற்று அதிகம் வந்த போதும் விசிறிக் காம்பு கையைப் பதம் பார்த்து விட்டது.

மீண்டும் மயூரி பரிதாபப்பட்டாள்.

அன்றிலிருந்து அந்த இருவரிடையே ஒரு விசித்திர அமைதி நிலவியது.

கடுஞ் சொற்களை இருவருமே பேசுவதில்லை. அவள் குத்துவதும் இல்லை. இவன் திருப்பிக் கொடுப்பதும் இல்லை.

அவன் வீடு திரும்பும்போது அவளுக்காக, எதையாவது வாங்கி வந்தான். பூ.. பழம், உண்டி வகைகள், துணிமணிகள்... எதையாவது. 'உன்னை நினைத்தேன்....' என்று சொல்லாமல் சொல்வது போல.

மயூரி அந்த அளவுக்குப் போவதில்லை. ஆனால் மனுபரதனுக்குப் பிடித்தமான உணவு வகை ஏதாவது வீட்டிலிருக்குமாறு பார்த்துக் கொண்டாள்.

இங்கேயும் சமையலுக்கு ஒரு பெண் இருந்தாள். ஆனால் அவளையும் செய்யச் சொல்ல வேண்டும் அல்லவா? மகனையும் மகளையும் பற்றி மீனாட்சி சொன்னதைக் கேட்க நேர்ந்தது, இப்போது பயனாயிற்று.

இருவருமாக உட்கார்ந்து உலக விவகாரங்களை அலசுவதும் உண்டு.

சிரித்துப் பேசவும் தொடங்கினார்கள்.

வெகு சில சமயங்களில் இதற்கு மேலும் ஏதோ ஒன்றைக் கணவன் நாடுவது போல மயூரிக்குத் தோன்றும். ஆனால் ஏன் என்று அவள் யோசிக்கு முன்பாகவே அந்தத் தோற்றமே அவளது கற்பனையோ என்பது போல அவன் முகம் சாதாரணமாகி விடும். வேடிக்கையாக அவன் பேசுவதில் அவளுக்கு மற்றது மறந்து போகும்.

இரண்டு மூன்று முறை இப்படி ஆன பிறகு அந்தத் தேடல் தோற்றம் உண்மையே என்று மயூரி முடிவு செய்தாள்.

இப்போது அவனுக்கு என்ன வேண்டும்?

'இந்த நிலையில் மிருகங்கள்...' என்றவன் அவளை அந்த மாதிரி நாடப் போவதில்லை.

பின்னே?

அவனுடைய பெற்றோரைப் போல மனம் ஒன்றிய வாழ்வா?

எப்படி முடியும்? அவர்களுக்கிடையே நடந்தவற்றை நினைத்துப் பார்க்கும் போது இன்றைய சமூக வாழ்வே பெரிய விஷயம். இதற்கு மேற்பட்ட ஒன்றை எதிர்பார்க்க அவனாலேயே முடியாதே?

மயூரி குழம்பினாள். ஆனால், தன் குழப்பத்தைப் பற்றி மனுபரதனிடம் வெளிப்படையாகக் கேட்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவன் 'ஆமாம்' என்று விட்டால் அதற்குத்

தடையாக இருக்கும் பழைய சம்பவங்கள் நினைவு வந்து இன்றைய அமைதி கெட்டு விடக் கூடுமே?

எனவே அவனது முக மாற்றங்களைக் கவனியாதது போல அவள் சும்மாவே இருந்து விட்டாள்.

இந்நிலையில் ஒரு வேலையாக வெளியூர் போவதாகவும், திரும்ப வருவதற்கு இரு தினங்கள் ஆகக் கூடும் என்றும் மனுபரதன் கூறவும் அவனது 'தேடும் பார்வைகள்' நினைவு வர மயூரி திகைத்தாள்.

ஒருவேளை, இது... 'அந்த' இரண்டு நாட்கள் மாதிரியோ?

16

மனுபரதன் வெகுவாக மாறி விட்டதாக மயூரி நினைக்கத் தொடங்கி யிருந்தாள்.

தன் குழந்தை என்று உணர்ந்ததும், பொறுப்போடு அவளை மணந்து அழைத்து வந்தவன், சும்மாவே மெல்ல மெல்ல மாறத் தொடங்கியிருந்தான். அன்றைய நடன அரங்கேற்றத்துக்குப் பிறகு முழுமையாக மாறி விட்டான் என்பது அவளது கருத்து.

பிராயச்சித்தம் என்றெல்லாம் கேட்டானே?

செய்த தப்புக்கு வருந்துகிறான், மனைவி என்று ஆனவுடன் அவள் மேல் அன்பு வந்து விட்டது என்று கூட எண்ணினாள்.

அந்த மின்வெட்டு இரவுக்குப் பின் வெகு விரைவிலேயே வீட்டுக்கு வந்து சேர்ந்த 'ஜெனரேட்டர்' அந்த எண்ணத்தை வலுப்படுத்தியது.

அந்து

திர்காலம் பற்றிய சிறு நம்பிக்கையையும்

தது.

யாகக் காதல் பறவைகளாக அவளும்

தனும் வாழக் கூடும் என்று அவள் எண்ணி

டவில்லை. என்னதான் அவன் மாறினாலும் அவளுடைய பெற்றோரின் மரணத்துக்குக் காரணமானவன் மனுபரதன். அவனோடு இணைந்து வாழ்வது அவளைப் பொறுத்தவரை நடக்காத காரியமே.

அது அவளுடைய பெற்றோருக்குச் செய்யும் துரோகம். அதை அவளால் செய்ய முடியாது.

ஆனால் இப்போது இருப்பது போல வாழலாம். ஒருவருக்கொருவர் ஏதோ ஒரு வகையில் உதவிக் கொண்டு சற்று இணக்கமாகப் பேசிக் கொண்டு... இப்படியே இருந்து விடலாம்.

குழந்தை ஒன்று வரப் போகிறது. சின்னக் குழந்தை என்றால் எப்படியும் சந்தோஷம்தானே?

அதன் சிரிப்பையும், விளையாட்டையும் பார்த்து ரசிக்கலாம்.

அதை நல்லபடியாக வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளோடு வாழ்க்கையை நடத்தி முடித்து விடலாம்.

ஒருவேளை, வாழ்வில் அவளுக்கு ஒரு பிடிப்பை உண்டு பண்ணுவதற்காகத்தான் கடவுள், அவளுக்கு இந்தக் குழந்தையைக் கொடுத்தாரோ என்னவோ?

இப்படியெல்லாம் எண்ணமிட்டதால் முன்போலக் 'கடனே' என்று நாளைக் கழிப்பதை விடுத்து வருங்காலத்தை மயூரி நல்லபடியாக எதிர்நோக்கத் தொடங்கியிருந்தாள்.

குழந்தை எப்படியிருக்கும், யாரைப் போல இருக்கும் என்றுகூட யோசித்துப் பார்த்திருந்தாள்.

அவனானால் அஸ்திவாரத்தையே அசைக்கிறானே!

தொழில் விவரம், வீட்டுப் பெண்களிடம் சொல்ல வேண்டும் என்கிறவன் ஆயிற்றே? கேட்பதில் தப்பில்லை என்று எண்ணி "என்ன விஷயமாகப் போகிறீர்கள்?" என்று அவள் கேட்டதற்கும் மனுபரதன் சரியாகப் பதில் சொல்லவில்லை.

எங்கோ பார்த்தபடி "வேலை" என்றதோடு நிறுத்திக் கொண்டான்.

அது வேறு, மயூரியின் மனதைக் குடையத் தொடங்கியது.

மாதங்கள் முதிர்ந்து விட்ட இந்தத் தருணத்தில், மயூரி தனியே இருக்க வேண்டாம் என்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

எனவே மனுபரதன் ஊரில் இல்லாத இரண்டு நாட்களும், அவள் அடையாறு பங்களாவில் மாமனார், மாமியாரோடு இருப்பதாக ஏற்பாடாயிற்று.

அங்கேயும் ஒரு ஜெனரேட்டரைப் பார்த்தபோது அதிலும் "அடிக்கடி மின்வெட்டு செய்கிறார்கள். வியர்த்தால் உனக்குச் சிரமமாக இருக்கும் என்று பரத் வாங்கி வைத்திருக்கிறான்" என்று மீனாட்சி சொன்னபோது மயூரிக்கு பெருமளவு ஆறுதலுற்றது.

153

டத்தில் நின்றபோது "பணத்தைக் கொஞ்சம் யே கேட்டுவிடு பரத். தொழில் செய்யும் ற்ற முடியும் என்கிற எண்ணம் யாருக்கும் கூடாது. அப்புறம் சொன்னபடி பணத்தைக் கொடுக்கும் எண்ணமே இருக்காது. கோவைக்காரர் தர வேண்டிய தொகை பத்து லட்சத்தைத் தாண்டி விட்டது இல்லையா? இனியும் சும்மா விடக் கூடாது" என்று குருபாதம் மகனிடம் சொல்லிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்த போது மயூரி மீண்டும் கலங்கிப் போனாள்.

வசூல் செய்வதற்கு மனுபரதனுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? அல்லது மிரட்டத்தான் கற்றுக் கொடுக்க வேண்டுமா?

அவனே அந்தக் கலையில் மன்னனாயிற்றே!

மயூரியின் மன அமைதி கலைந்து போயிற்று.

மனுபரதன் கிளம்பியதிலிருந்து வேறு எந்த விஷயத்துக்கும் அவள் மனதில் கொஞ்சமும் இடம் இருக்கவில்லை.

மெய்யாக, மனுபரதன் கோவைக்கு எதற்காகப் போகிறான் என்று அவனது பயண நேரம் முழுவதும் யோசித்தாள்.

மனுபரதன் கோவையை அடைந்திருக்கக் கூடிய நேரத்தைக் கணக்கிட்டவள், அதன் பின் இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்று யோசிக்கத் தொடங்கினாள்.

அதன்பின் முழு நேரமும் இந்தக் கேள்விதான் அவள் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

அதை இன்னமும் தூண்டி விட கடற்கரை வீடு 'சுகந்த'த்தின் நினைவு அடிக்கடி வந்தது.

மீண்டும் மீண்டும் மனுபரதனின் பண வசூலுக்காக பயணமும், அதற்காக அவன் எடுத்துக் கொண்டிருக்கும் இரண்டு நாட்களுமே நினைவு வந்து அவளை நிலை குலையச் செய்தன.

அது இரண்டு நாட்களாக இல்லாமல், ஒரு நாள் கூடுதலாக மூன்று தினங்களாக இருந்திருந்தால் கூட அவள் இப்படித் தவித்திருக்க மாட்டாளோ என்னவோ?

ஆனால்... அவன் வசூல் என்றுதான் போயிருக்கிறான்... அத்தோடு அந்த வசூலுக்கு இரண்டு நாட்களும் அவன் எடுத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அப்போது செய்தது தப்பு என்று அவளிடமே ஒத்துக் கொண்டவன், அவ்வளவு வருத்தப்பட்டவன் மறுபடியும் அதே தப்பைச் செய்வானா?

செய்ய மாட்டான் என்று அவளது அறிவு எவ்வளவோ எடுத்துச் சொன்னபோதும் மயூரியின் மனம் தவித்துக் கொண்டே இருந்தது, வினாடி தப்பாமல்.

இரு தினங்களுக்குப் பதிலாக, ஒரே நாளில் திரும்பி வந்து வசூலான பணத்துக்கான டிடியை, மனுபரதன் அவனுடைய தந்தையிடம் காட்டுவதைப் பார்த்த பிறகுதான் அவள் நிம்மதி அடைந்தாள்.

சே! என்ன அசட்டுத்தனமாகக் கவலைப்பட்டு விட்டாள். இனிமேல் மனுபரதன் அந்த மாதிரித் தப்பு செய்யவே மாட்டான்.

டிடியைப் பார்த்ததும், குருபாதத்துக்கும் ஆச்சரியம்தான். "என்னடா நீ வருகிறாய் என்று தயாராக டிடியே எடுத்து